LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL MAGAZINE

MYLAPORE

EDITORIAL BOARD

EDITOR-IN-CHIEF

Srimathi S. Chellam, M.A., L.T.

ASST. EDITORS

Srimathi	C. R. Sathyabhama, M.A., B.T., H.Sc. (Dip.)	(*English Section*)
,,	V. Meenakshi, M.A., L.T.,	(*English Section*)
,,	V. Rajammal	(*English Section*)
,,	R. Visalakshi	(*English Section*)
,,	V. Sarojini, Vidwan (Tamil)	(*Tamil Section*)
,,	R. Sarswathi Bai, B.A.	(*Tamil Section*)
,,	K. S. Anandavalli, Vidwan (Tamil)	(*Tamil Section*)
,,	A. K. Balambikai, Vidwan (Tamil)	(*Tamil Section*)
,,	R. Savitri, Praveen, Pracharak, (Hindi)	(*Hindi Section*)
,,	V. Vatsala	(*Art Section*)

PUPIL-EDITORS

V. A. Rajalakshmi	Form VI-A	(*English Section*)
R. Vasantha	,, VI-B	(*English Section*)
T. K. Radha	,, VI-A	(*Tamil Section*)
P. B. Visalakshi	,, VI-B	(*Tamil Section*)
C. R. Chandra	,, VI-A	(*Hindi Section*)
N. Saroja	,, VI-D	(*Art Section*)

Printed by Mr. G. Raghavan at The Huxley Press, 114, Armenian Street Madras, G.T.,
1330 Copies and Published by Srimathi S. Chellam, M.A., L.T., Editor
at Lady Sivaswami Ayyar Girls' High School, Mylapore.

CONTENTS

	Page
பாரத தேசத்தின் பெருமை—C. R. Chandra, VI-A ...	1
மழைக்கால வர்ணனை—P. R. Pattu, VI-B ...	3
வான வீதியிலே—R. Meenakshi, VI-C ...	4
தமிழ் மொழியின் பெருமை—K. Madhuram, VI-D ...	5
அன்பு—A. Pushpavalli, V-A ...	7
கைத்தொழிலின் மேன்மை—P. B. Visalakshi, V-B ...	8
பள்ளிக்கூடப் பத்திரிகை—A. Lakshmi, V-C ...	9
அமரர் கல்கியின் மறைவு—K. Shanthi, V-D ...	10
என் வீடு—S. Shantha, IV-A ...	11
பக்தி—T. R. Gayathri, IV-B ...	12
இமயத்தின் மகுடம்—R. Vedavalli, IV-C ...	13
உலக சமாதானம்—A. Lakshmi, IV-D ...	14
சென்னைக் கடற்கரை—S. Vaidehi, IV-E ...	15
புயலின் செயல்—D. Hemavathi, III-A ...	16
கனவும் நனவும்—R. Kalavathi, III-B ...	17
சென்னையில் நேரு—R. S. Jayanthi, III-C ...	18
சொற் பொழிவுகளால் ஏற்படும் பயன்கள்—K. Mangalam, III-D ...	19
துணி சொன்ன கதை—P. R. Shantha, III-E ...	20
திரு ஓணப்பண்டிகை—M. Gomathi, II-A ...	21
மதுரைக் கோயில்—V. Lalitha, II-B ...	22
இனியவை பேசுதல்—V. S. Jagadeeswari, II-C ...	23
சுகாதாரப் பழக்கங்கள்—D. Kalaivani, II-D ...	24
என் இரயில் பிரயாண அனுபவம்—K. Suryakumari, II-E ...	25
தாமரை—A. Rukmini, I-A ...	26
தெப்பத் திருவிழா—S. Vanaja, I-B ...	27
வழியில் நேர்ந்த விபத்து—R. Santha, I-C ...	28
வரிசை ஒழுங்கு—P. Rajeswari, I-D ...	28
மாணவியர் சங்கம்—C. R. Chandra, VI-A & R. Ramaa, V-A ...	30
ஆசிரியர் சங்கம்—C. R. Satyabhama, M.A., B.T., H. Sc., (Dip.) & R. Saraswathibai, B.A., (Trd.) ...	32
அன்னையர் சங்கம்—V. Sarojini, *Vidwan (Tamil)* ...	33
பழைய மாணவியர் சங்கம்—T. Kalpakam, B.A., B.T., and M. Pitchai	35
ஸர் எஸ். வரதாச்சாரியார் சிலை திறப்பு விழா—V. Sarojini, *Vidwan (Tamil)* ...	36
நுண் கலை விழா—Kamala Rajagopalan, B.A., L.T., & V. Rajammal	38
பள்ளி விளையாட்டு விழா—Saraswathibai, B.A. ...	40
तारे—Thripurasundari IV-A ...	1
एक दिन—V. Rajalakshmi, IV-B ...	1
तिरुवल्लुवर—A. M. Mumtaz, V-B ...	2

PAGE

मेरा स्वप्न—R. Parvathi, V-D ... 2
फूल—S. Vaidehi IV-B ... 3
मेरा गाँव—R. Anandavalli, V-A ... 3
हमारा देश—S. Susila, IV-A ... 4
सिनेमा से लाभ—T. S. Yamuna Bai, IV-D ... 4
उषा काल—P. Mythili, VI-A ... 5
राजा दिलीप—S. A. Indira, VI-B ... 5
इनसानियत—C. Rani Bai, VI-D ... 6

PHOTOGRAPHY—V. A. Rajalakshmi, VI-A ... 1
HOW I LEARNT CYCLING—R. Shanta, VI-B ... 2
OUR FIRST—AID CLASS—R. Meenakshi, VI-C ... 3
PRESERVATION OF WILD LIFE—T. V. Sundari, VI-D ... 3
THE MORNING HUBBUB—R. Ramaa, V-A ... 4
A WISE DOCTOR—T. N. Jayalakshmi, V-B ... 5
THE GANDHI MANDAPAM—K. N. Vijayalakshmi, V-C ... 6
AN AUTOBIOGRAPHY—T. K. Indira, V-D ... 7
OUR PRACTICAL CLASS—M. Jagadha, IV-A ... 8
KASHMIR—R. Padmaja, IV-B ... 8
THE POLICE AND THEIR DUTIES—M. Kalpakam, IV-C ... 9
THE AYANAVARAM DAIRY FARM—M. R. Syamakumari, IV-D ... 10
SAROJINI NAIDU—D. Devaki, IV-E ... 11
A WALK ON A MOON-LIGHT NIGHT—S. Meenakshi, III-A ... 11
OUR TRIP TO ASSAM—K. Prema, III-B ... 12
OUR NATIONAL FLAG—A. Lakshmi, III-C ... 12
THE TEMPLE AT MYLAPORE—T. Kalavalli, III-D ... 13
HOTELS—G. Usha, III-E ... 13
THE WASHERMAN—S. Syamala, II-A ... 14
THE EVENING BAZAAR—V. Lalitha, II-B ... 15
DEEPAVALI—V. Lalitha, II-C ... 15
THE ELEPHANT—D. Kalaivani, II-D ... 15
THE RAILWAY STATION- K. Suryakumari, II-E ... 16
THE BLACK-BOARD—A. Rukmani, I-A. ... 17
MY SCHOOL BAG—R. Neeraja, I-B ... 17
MY ROOM—P. R. Lakshmi, I-C ... 18
THE GOOSE THAT LAID GOLDEN EGGS—N. Santhalakshmi, I-D ... 18
THE SOVIET LEADERS' VISIT TO INDIA—I—C. R. Chandra, VI-A ... 18
THE SOVIET LEADERS' VISIT TO INDIA—II—T. V. Sundari, VI-D ... 19
THE SCHOOL ANNIVERSARY AND PRIZE DISTRIBUTION ... 20
OUR ELEVENTH ANNUAL EXHIBITION 1955—'56 ... 22
OUR SCHOOL A. C. C.—V. Meenakshi, M.A., L.T. *Group Commander* ... 24
EDITORIAL NOTES ... 25
OUR SCHOOL DIARY—1955-56 ... 33

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE



GODDESS SARASWATHI
Presiding Deity of the School.

லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்தரப் பாடசாலைப் பத்திரிகை

மயிலை

Vol. XVIII | MARCH 1956

2? MAR 1956

பாரத தேசத்தின் பெருமை

முப்புறம் நீர் சூழ்ந்த வெளியையும், தலைக்குமேல் வானோங்கி நிற்கும் பனி மலையையும் தன் எல்லைகளாகக்கொண்டு, பல்லாண்டுகளாக உலகத்துக்குச்சேவை புரிந்து வருகிறாள் நம் பாரதத்தாய். இயற்கையிலிருந்து பாரதத்தாய் பெறும் செல்வம் கொஞ்ச நஞ்சமல்ல. அதனையும் பாரதத்தின் பெருமைக்குப் பணியாற்றிய மக்களைப் பற்றியும் ஈண்டு சிறிது ஆராய்வோம்.

உலகில் பல்வேறு பாகங்களில் சிதறிக் கிடக்கும் இயற்கை வளங்கள் அனைத்தும் நம் பாரதத்தில் ஒருமிக்க மலிந்து கிடக்கும் மகிமையே மகிமை! இராஜபுதனம் போன்ற வறண்ட பாலைவனம் முதல் கங்கை நதி பாயும் செழுமையான சமவெளியும், பனி உறைந்து கிடக்கும் மலைச்சிகரங்களும், நாட்டை வளம் செய்யும் ஆறுகளும் நம் நாட்டில் உள்ளன. இங்குப் பல மொழிகளைப் பேசுபவர்களும், பல மதங்களைச் சார்ந்தவர்களும் வாழ்கின்றனர். உலகின் பல்வேறு பாகங்களில் கிடைக்கும் கனிச் செல்வங்கள் அனைத்தும் பாரத அன்னையிடம் பொதிந்து கிடக்கின்றன. இங்ஙனம் நமது நாட்டு இயற்கை வளமே, நம் நாட்டின் பெருமைக்குக் காரணமாயுள்ளது. அந்நியர்களும் நம் நாட்டுச் செல்வத்தை விரும்பித்தானே படையெடுத்து வந்தனர்!

இன்னும் பாரதத்தின் பெருமைக்குக் காரணமாயிருந்த நம் பண்டை மன்னர்களைச் சிறிது நோக்குவோம். அதர்மத்தை ஒழித்து, தர்மத்தை நிலை நாட்டிய அசோகனும், உலக அற்புதங்களில் ஒன்றாய் நிற்கும் தாஜ்மஹாலைக்கட்டிய ஷாஜஹானும், அஜந்தா, எல்லோரா போன்ற கலைக்கூடங்களை அமைத்த மன்னர்களும் மற்றும் பலரும் ஆண்டது நம் பாரத நாடு என்பதை நினைக்கையில் நம் உள்ளம் மகிழ்கிறது.

உலகம் புகழ் வள்ளுவனை ஈன்றதாய் நம் பாரத அன்னையே. நாவன்மை மிகுந்த புலவர்கள் தம் பாமாலைகளால் நம் அன்னையை அலங்கரித்திருக்கின்றனர். அவள் அதனால் இன்னும் பெருமை பெற்று விளங்குகிறாள். கம்பர், வால்மீகி, சிவபக்தியை வளர்த்த நாயன்மார்கள், வைணவமதத்தை வளர்த்த ஆழ்வார்கள் முதலியோர் வாழ்ந்தது நம்

ஆனைக்கு எதிரி நெரிஞ்சி முள்

நாடே. இங்ஙனம் நம் நாடு கலையிலும், கவிதையிலும், தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்குகிறது. பக்தியின் உருவே பாரதநாடு! உண்மையின் சின்னமே பாரதநாடு!

கடவுளுக்கு ஈடான மாபெரும் மணிகளை நம் பாரத அன்னை அடைந்திருந்தாள். இன்று அம்மணிகள் மறைந்தாலும் அவற்றின் ஒளி தேசமெங்கணும் வீசுகிறது. புத்தரும், மகான் காந்தியடிகளும், ரமண மகரிஷியும் அத்தகைய மணிகளன்றோ?

விருந்தோம்பல் என்னும் பண்பும் நம் பாரத மக்களின் இரத்தத்தில் ஊறினது போலும்! அந்நியர்களையெல்லாம் நாம் வரவேற்றோம். அன்னோர் நம்மை அடிமைப்படுத்தினர். அறப்போர் நிகழ்த்தி வெற்றி கண்டோம்! ஆம். இறைவன் நல்லோரை என்றும் கைவிடான்! மற்ற தேசங்கள் வாளேந்தி இரத்தம் சிந்திப் போரிட்ட போது, நம் மக்கள் அஹிம்சை என்னும் வாளேந்தி, உண்மை என்னும் உறுதியுடன் போரிட்டது உலகையே இன்னும் வியப்பில் ஆழ்த்துகிறது!

இன்றும் நம் பாரதத்தை நோக்குங்கள்! எள்ளளவேனும் தன் புகழில் குறைவு பட்டுள்ளதோ? அல்ல! தூய்மையைக்காட்டும் வெண்மையும், தியாகத்தைக் காட்டும் செம்மையும், செழிப்பைக்காட்டும் பசுமை நிறமும், தர்மத்தைக்குறிக்கும் அசோக சக்கரமும் கொண்டு வானளாவிப் பறக்கும் நம் கொடியின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

பெறற்கரிய மாணிக்கத்தை நாம் பெற்றுள்ளோம். நம் தலைவர் ஜவஹர்லால் நேருவே அம் மாணிக்கம். காந்திய வழியில் தவறாது நம்மை அழைத்துச் செல்லும் அவரை ஏத்துவோமாக!

இன்றைய உலகில் ஓரளவாவது சமாதானம் நிலைத்திருக்கப் பெரும் பணியாற்றிய நாடு நம் பாரத நாடே. பஞ்சசீலக் கொள்கைகளை உலகத்துக்கு எடுத்துக் காட்டினர் நம் தலைவர்கள். ஐ. நா. சபையில் நம் நாட்டினர் செய்து வரும் பணி மிகப் பெரியது. ஐ. நா. சபையில் சேரக்கூடாதென பதினெட்டு நாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று அந்நாடுகள் அங்கத்தினர்களாக உதவி புரிந்த நாடு நம் பாரத நாடே என்று ஐ. நா. சபையின் தலைவரும் ஏனையோரும் ஒரு மனதாகப் போற்றினது நினைவில் இருக்கலாம்.

உருஷ்யத்தலைவர்கள் தமது இந்திய விஜயத்தின் போது கூறிய சிற்சில சொற்கள் என்றும் நம் உள்ளத்தை விட்டு மறையாது பசுமரத்தாணி போல் பதிந்துள்ளன. அவற்றின் சாரமாவது, "உலகத்தின் எந்தப்பிரச்னையும் பாரதத்தின் உதவியின்றித் தீர்த்தல் இயலாது." இங்ஙனம் அந்நியர் நம்மைப் புகழக் காரண மென்ன? இதர தேசங்கள் "போர் போர்" என்று இரத்த தாக மெடுத்துக் கதற, நாம் சமாதானத்தை விரும்புகிறோம். அந்த உயரிய பண்பு இதர தேசங்களையும் வியப்படையச் செய்கிறது. சீலமே நம் இலட்சியமாக உள்ளது. பாரத நாட்டின் பண்பே இதர தேசங்களை நம்முன் பணியச் செய்கிறது.

அதிகமான பழக்கம் அவமரியாதையைத் தரும்

அமெரிக்கா, உருஷ்யா முதலிய தேசங்கள் அணுகுண்டுகள் செய்து கொண்டு வந்தன. ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்லும் அந்த நாசகாரியத்தில் நம் பாரதம் வெறுப்புக்கொண்டு, அணுச் சக்தியை மக்கள் நலனுக்காகப் பயன் படுத்தக் கோரினதால் இன்று உலகம் இன்னும் செழிப்படைய வழி கிடைத்துள்ளது.

இவை போன்ற சில தனிப்பட்ட பண்புகளும், செல்வமுமே நம் பாரதத்தின் உயிர் நாடியாய், பெருமையின் சின்னமாய் உள்ளன. மாணவிகளாகிய நாம், பாரத அன்னையின் பெருமையை மேன்மேலும் உயர்த்தத்தக்க பணிகளில் ஈடுபட்டு உள்ளம் களிப்போமாக!

C. R. சந்திரா, VI-A.

மழைக் கால வர்ணனை

கரிய இருள் சூழ்ந்த மேகங்களிலிருந்து பொழியும் மழையைக்கண்டு சிறுவர்கள் ஆடும் கூத்துத்தான் எவ்வளவு அழகாக இருக்கின்றது!

கரிய மை போன்ற மேகக்கூட்டங்கள், இளகி, உருகி, பூமியில் வழிகின்றதோ என்று ஐயுறும் படியாக இருக்கின்றது மழை.

ஐப்பசி மாதத்து மழை ஐம்புலன்களும் நடுங்கும்படியாக இருக்கின்றது. ஐப்பசியில் "அடைமழையும்", கார்த்திகையில் "கார்மழையும்" பெய்யும் எனப் பெரியோர் கூறுவர். இம்மொழி எவ்வளவு உண்மையானது!

ஐப்பசிக்குளிரில் தீபாவளியன்று காலை குழந்தைகள் பட்டாசு சுடுகையில் மழைபெய்து அவர்களைத்தடுக்கும் பொழுது எவ்வளவு ஏமாற்றக்குறிகள் அவர்கள் முகத்தில் காணப்படுகின்றன. அதேபோல் கார்த்திகையன்று சிறுமிகள் வீட்டு வாயிலில் விளக்குகளை ஏற்றி வைத்தவுடன் கனமழை பொழிந்து அத்தீபங்களை அணைக்கும் பொழுதும் மேற்கண்ட உணர்ச்சியே ஏற்படுகின்றது. ஆனால், தேங்கி நிற்கும் தண்ணீரில், காகிதத்தால் செய்த கப்பல்களை விடும் பொழுது அந்த ஏமாற்ற உணர்ச்சி மறைந்து எங்கிருந்தோ மகிழ்ச்சி வந்து அவர்களையடைகிறது. இது இயற்கையின் விந்தை போலும்!

மழைக்காலத்தில் மக்கள் யாவருக்கும் பற்பல உணர்ச்சிகள் தோன்றுகின்றன. ஆண்கள் காலையில் தங்கள் உத்தியோகத்திற்குச் சரியான வேளையில் செல்ல முடியாதபடி போக்கு வரவு சாதனங்கள், தடைப்படுகின்றன. அதனால் அவர்களுக்குச் சினமுண்டாகிறது. இல்லத்தரசிகளாய் விளங்கும் பெண்களோ, "மந்தாரப் போது மக்ளிருக்குக் கேடு", என்றபடி வானத்திலோடும் மேகம் காலம் காட்டும் பகலவனை மறைப்பதால், நேரமறியாமல், தங்கள் கணவன்மாருக்கு வேளைக்குச் சமைத்துப்போட முடியாமல் வருந்துகின்றனர். அதே சமயத்தில் விவசாயிகளுக்

குப் புதிய உற்சாக மேற்பட்டு, தெம்மாங்கு பாடிக்கொண்டு வயலில் ஊக்கமுடன் அவர்கள் வேலையைச் செய்கின்றனர். குழந்தைகள் முகத்தில் பற்பல உணர்ச்சிகள் தோன்றி முடிவில் அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. மழை மக்களைப்படுத்தும் பாட்டை வர்ணிக்கவும் இயலுமோ !.

P. R. பட்டு, VI-B.

வான வீதியிலே

வான வீதியிலே ஒளிரும் நட்சத்திரங்களும், பால் நிலவைப் பொழியும் சந்திரனும் ஆதிகாலந்தொட்டு விண்டுரைக்க முடியாத அற்புதக் காட்சிகளாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆதிகால மனிதன் இவைகளைக் கண்டு பயந்து தெய்வங்களாக வணங்கி வந்தான். பின்பு அச்சம் நீங்கி அவனது அறிவு வளர்ச்சியடைய ஆரம்பித்ததும் விஞ்ஞான நோக்குடன் அவைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

இயற்கைப் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டினால் சூரியன், சந்திரன், நட்சத்திரம், மற்றும் கிரகங்களின் நிலை என்ன என்கிற அற்புதக் கதைகள் ஒருவாறாக விளங்கும். இரவில் நிர்மலமான வானத்தில் ஒளிரும் விண் மீன்கள் " வானக் கடலிலே வெடித் தெழுந்த வைரங்கள் " என்று பாரதியார் கூறியதை ஞாபகப் படுத்துகின்றன.

நட்சத்திரங்கள் மனிதனுக்குக் காட்சிப் பொருள்களாக மட்டுமன்றி பல வகைகளிலும் உதவி வந்திருக்கின்றன. அவன் நட்சத்திரங்களைப் பார்த்துக் காலத்தை அறிந்து வந்திருக்கின்றான். தனக்குப் பழக்கமான நட்சத்திரங்களைக் கொண்டு பல்வேறு பருவ காலத்தையும் தெரிந்து கொண்டிருக்கின்றான். கடலிலே திசையறியாமலிருக்கும் மாலுமிக்கு நட்சத்திரங்கள் வழி காட்டியாயிருக்கின்றன.

பகலிலும் வானத்தில் நட்சத்திரங்கள் மிளிர்கின்றன. ஆனால் ஆதித்தனின் ஒளியினாலும், காற்று மண்டலம் சூரிய ஒளியைக் கிரகித்து நாலா திசைகளிலும் பரப்புவதாலும் பகலில் நாம் நட்சத்திரங்களைக் காண முடிவதில்லை. முன் காலத்தில் ரிஷிகள், பறவைகள், மிருகங்கள், முதலியவர்களுடைய பெயர்களை இவைகளுக்கு வைத்தார்கள்.

மாலையில் நாம் வானத்தைக் கவனித்தால் சில சமயங்களில் ஒளிப்பிழம்புகள் ஊடுருவிப் பாய்ந்து விழுவது போலத் தோன்றும். நட்சத்திரங்கள் எரிந்து விழுவதாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால் இதை விண் வீழ் கொள்ளிகள், ஆங்கிலத்தில் (Meteor) 'மீடியார்' என்று கூறுவர்.

சில வேளைகளில் அந்தி நேரத்தில் ஒரு பிரகாசமான நட்சத்திரம் மேற்றிசையில் தோன்றுவதைக் காணலாம். இது பூமிக்கு அருகாமையிலுள்ள சுக்கிரன் என்னும் கிரகமேயாகும்.

மற்றும் புதன், செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், ப்ளுட்டோ முதலிய கிரகங்களும் உள்ளன. தொலை நோக்கியின் உதவியால் இவற்றைப்படம் பிடித்து அவற்றின் தன்மைகளை நமக்கு விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

"மீனினம் ஓடிப்பறக்குதம்மா!— ஊடே
வெள்ளி ஓடம் ஒன்று செல்லுதம்மா!
வானும் கடலாக மாறுதம்மா! இந்த
மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா!"

என்று கவிமணியவர்கள் வானத்தைக் கடலாகக் கற்பனை செய்து இயற்கை அன்னையின் லீலா விநோதங்களில் மனத்தைப் பறி கொடுக்கும்படி பாடியுள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கது.

R. மீனாக்ஷி, VI C.

தமிழ் மொழியின் பெருமை

நம் தமிழ் மொழியின் பெருமையையும் தொன்மையையும் பற்றி நினைக்குங்கால் நம் உள்ளம் உவகைக் கடலிலன்றோ மூழ்குகின்றது! ஆம் அது தான் உண்மைத் தமிழருக்கு வேண்டும். பெற்ற தாயின் பெருமையைப் பற்றிக் கூறும் சேய், மலரின் பெருமையைப் பற்றிக் கூறும் மங்கை, கதிரவனின் பெருமையைப் பற்றிக் கூறும் கமலம், அம்புலியின் பெருமையைப் பற்றிக் கூறும் அல்லி, தேனின் பெருமையைப் பற்றிக் கூறும் வண்டு ஆகிய இவைகள் எப்படி மகிழ்வது இயற்கையோ அவ்வாறே தான் நம் தமிழ் மொழியின் பெருமையைப்பற்றி எடுத்துரைக்குங்கால் நாம் ஆனந்தக் களி நடனம் புரிகின்றோம். ஆனாலும் நம்மில் அநேகர் தமிழ் மொழியை இகழ்ந்து வேற்று மொழியை ஆதரிக்கின்றனர். அவர்கள் யாது காரணத்தால் தேனினும் இனிய தமிழ் மொழியின் சுவையை அறியாது அதை இகழ்கிறார்கள் என்பது என் சிற்றறிவிற்கு எட்டவில்லை. தன் தாயை விரட்டி விட்டு மாற்றாருக்கு இடம் கொடுக்கும் அறிவீனனைப் போல இருக்கின்றனர் அறிவின்மையால் சிலர்.

நம் தமிழ் மொழி சாதாரண மொழியல்ல. அஃது எக்காலத்தில் உண்டானதென்று வரையறுத்துக் கூற முடியாது. சரித்திர காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மொழி சிறப்புற்றிருந்ததை தொல்காப்பியத்திலிருந்தும், சங்கநூல்களினின்றும் அறியலாம். அஃதுமட்டுமா? பாண்டிய நாட்டிலே பண்பட்டதமிழ்! சேர நாட்டிலே சிறப்புற்ற தமிழ்! சோழ நாட்டிலே சோர்வின்றி வளர்ந்த தமிழ்! கம்பன் கருத்திலே களி நடம் புரிந்த தமிழ்! இளங்கோ மனதிலே இன்புற்றிருந்த தமிழ்! புகழேந்தி புகழ்ந்த தமிழ்! வள்ளுவர் வாழ்விலே வளர்ந்தோங்கிய தமிழ்!

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் இன்று ஆதரிப்பாரற்று சீர்கேடான நிலைமையிலுள்ளது. சீர்திருத்துவோ

ரும் இல்லை. கன்னித் தமிழே! இவ்வுலகில் மக்கள் பிறந்தவுடன் 'அம்மா' என்று கூறுவது உன்னுடைய அழகு மொழியில்தானே. 'ஆராரோ' என்று தொட்டிலில் இசைபாடி ஆட்டுவதும் உன்னுடைய இனிய மொழியில் தானே. தெய்வத்தையும் மனிதர்களையும் உன் இசையாகிய சங்கிலியால் தானே பிணைக்க முடிகிறது. அப்படியிருக்க ஏன் அநேகர் தாய் மொழிப்பற்றில்லாமல் இருக்கின்றனர்?

தமிழ் மொழியின் பெருமைக்கு இன்னமும் சான்று வேண்டுமா? மக்கள் விழித்துக்கொள்ளுமாறு தேசீயப்பாடல்கள் அநேகம் இயற்றிய அமரகவி பாரதியார் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று தமிழ் மொழியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இலக்கியங்களை எடுத்துப் பார்த்தோமானால் தமிழரசர்களை வடநாட்டார் இகழ்ந்தார் என்பதற்காக சேரன் செங்குட்டுவன் இமயம் வரைப் படையெடுத்துச் சென்று அங்கு தன்வெற்றிக் கொடியை நாட்டினான் என்பது தெரியவரும். அவனது வழியிலே வாழையடி வாழையாக வந்தவர்கள் தானே நாம்! அப்படியிருக்க நாம் ஏன் தமிழைக்காக்கத் துணியவில்லை?

தமிழ் மொழியின் பெருமையை உணர்ந்து எல்லோரும் தமிழிலே பண்டிதர்களாக வேண்டும்.

K. மதுரம், VI D.



M. K. Jagadeeswari, I-D.

அன்பு

பிறருடைய மனம் புண்படாவண்ணம் இனிய சொற்களைப் பேசுவதும் இனிமையாக நடந்து கொள்வதும் அன்பு எனப்படும். கடுஞ்சொல் ஒருவர் மனதைத் துன்புறுத்துமேயல்லாமல் இன்சொல் பிறரைத் துன்புறுத்துவதில்லை இதை "இன்சொல் இடர்ப் படுப்பதில்" என்னும் பழமொழியால் அறியலாம்.

நாம் எப்படிப்பிறரால் நடத்தப் படவேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படியே நாமும் பிறரிடம் நடந்து கொள்ளவேண்டும். ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கத் தக்க திரவியம் நம்மிடத்து இல்லாவிடினும், கடவுள் நமக்குப் பிறரிடம் கருணை காட்டவல்ல மனத்தைப் படைத்துள்ளார். ஏழை எளியவரிடத்து இன்முகம் காட்டிப் பேசவும், பிறர்பால் அன்பு கொள்ளவும் பணம் தேவையில்லை. நம் சுற்றத்தாரிடமும் நம் நண்பர்களிடமும் அன்பு காட்ட நம்மால் இயலும் போது, பிறரையும் அவ்வாறெண்ணி அன்புகாட்டுவது இயலாதோ? ஒரு சிலரிடம் ஒருவாறு நடந்து கொள்வதற்கும் வேறு சிலரிடம் வேறு விதமாக நடந்து கொள்வதற்கும் காரணமாயிருப்பது நம் மனப் போக்கேயன்றோ? நாம் யாவரிடமும் பாரபட்சமின்றி அன்பு காட்டுவதையே நம் உயர்கொள்கையாகக் கொள்வோமாயின் 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்' என்னும் வள்ளுவர் வாக்கு எவ்வளவு பொருத்த முள்ளதாக இருக்கும்!

முற்காலத்தில் சான்றோர் பிராணிகளிடமும், மரம், செடி, கொடிகளிடமும் அன்பு காட்டினர் என்றால் நாம் நம் வர்க்கத்தைச் சேர்ந்த மனிதரிடம் கூட வெறுப்புக் காட்டுவது எத்துணை மதியீனமான செயல்? முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் அளித்த பாரியும் பேகனும் நம்மவரல்லவா? அற்பப்புறவுக்காகத் தன் உடலை அர்ப்பணித்த சிபியும், ஓர் பசுங்கன்றின் உயிருக்கு ஈடாகத் தன் மகனை மாய்த்து நியாயம் வழங்கிய மனுவும் எந் நாட்டைச் சேர்ந்தவர்? இத்தகைய அருளும் அன்பும் படைத்தவர்களின் வழி வந்த நாம் அப்பாதையினின்றும் விலகுதல் தர்மமோ?

பிறரிடம் அன்புகாட்டும் இயல்போடு கல்வியும், பிறநற்குணங்களும் ஒருங்கே அமையுமானால் அவர்களை அன்பே உருவான கலைத்தேவியின் அருட் பிறவி என்றே கூறலாம். அன்பினால் சாந்தமும், மகிழ்ச்சியும், பாரபட்சமற்ற தன்மையும் ஏற்படுகின்றன. அன்பே உருவாகவும், அமைதியே ஆடையாகவும், பொறுமையே அணிகலனாகவும், இன் சொற்களே நற்குணமாயும் உடையவரே போற்றத்தக்கவர். "அன்பே சிவம்" என்று போற்றப்படும் எம் பெருமான் நாம் பிறரிடம் அன்பு காட்டுவதால் அடையக்கூடிய பேரின்பத்தில் நம்மை ஆழ்த்துவாராக.

A. புஷ்பவல்லி, V-A.

உலகத்தை அறிந்தவன் கடவுளை அறிந்தவன்

கைத்தொழிலின் மேன்மை

கையால் செய்யப்படும் தொழில்கள் கைத்தொழில்கள் எனப்படும். நூல் நூற்றல், ஆடை நெய்தல், பாய் பின்னுதல், கூடை முடைதல், பாத்திரங்கள் செய்தல் முதலியன சில குடிசைத் தொழில்களாகும். இத்தொழில்களால் மக்கள் தம் வருவாயை அதிகப்படுத்திக் கொண்டு, தம் வாழ்க்கையை இன்பமாகவும், சௌகரியமாகவும் நடத்துகின்றனர்.

கைத்தொழிலில் மேம்பட்ட நாடே செல்வம் படைத்த நாடாகும். ஏனெனின் இவை நமக்கு என்றும் உணவு அளிப்பவை. நம் நாட்டிலேயே, நம் மக்களால் செய்யப்படும் இப்பொருள்களை நாமே வாங்குவதால் நம் நாட்டு மக்கள் நன்மை அடைவர். நம் நாட்டுச் செல்வம் பிற நாடுகளுக்குச்செல்ல வழியிராது. ஆகவே ஒரு நாட்டின் செல்வ நிலையை உயர்த்தும் இக்கைத்தொழில்களை நாம் ஆதரிக்க வேண்டும்.

நம் நாடு இன்று சுதந்திர நாடாக உலகமதிப்பிற்குப் பாத்திரமாகி விளங்குகின்றது. நம் தலைவர்களும் பற்பல திட்டங்களின் வாயிலாக நம் நாட்டைச் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத்தக்க நாடாக உருவாக்கப் பாடுபடுகின்றனர். சுதந்திர மடைந்த இக்குறுகிய காலத்திற்குள்ளேயே நம் நாடு பல துறைகளிலும் ஓரளவு முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காண்கிறோம். ஆகவே வருங்காலத்தில் நம் நாடு உலகத்தில் முன்னணியிலே நிற்கும் என்பதற்கோர் ஐயமுமில்லை.

நம் நாட்டைவிட மிகச் சிறியதானதும், குறைந்த ஜனத்தொகையுள்ளதுமான ஜப்பான் சுய தேவைப் பூர்த்தியுள்ள நாடாகத்திகழ்வதைக் காண்கின்றோம். காரணம் என்ன? அங்குள்ள மக்கள் பலவகையான கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அரசாங்கத்தாரும், மக்களும் அவைகளை ஆதரிக்கின்றனர். அப்படியாயின் அவர்களைவிடப்பெரியதோர் நாட்டையும், ஜனப் பெருக்கத்தையும் உடைய நாம் அந் நிலையை அடைவது முடியாத காரியமா?

மேல் நாடுகள் கைத்தொழிலால் தான் பிழைக்கின்றன. கைத்தொழில் வளர்ச்சி பெருத நாடு கையில்லாத மனிதனுக்கு ஒப்பாகும். ஆதலால் நாம் கைத்தொழில்களைப் பெருக்கி வளர்த்தலை நமது தலைசிறந்த கடமையாகக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பணி புரிவோமாக.

P. B. விசாலாக்ஷி, V-B.

A. Rajeswari, VI-B.

ஊசியைக் காந்தம் இழுக்கும்; உத்தமனைச் சிநேகம் இழுக்கும்

பள்ளிக்கூடப் பத்திரிகை

பல பள்ளிகளிலும் மாணவியர்களின் நன்மைக்காகப் பத்திரிகைகள் வெளியிடுவது வழக்கம். அது "பள்ளிக்கூட வெளியீடு" (School Magazine) எனப்படும்.

அதில் பள்ளித் தலைவி, ஆசிரியைகள், மாணவிகள் ஆகிய எல்லோரும் கட்டுரைகளையோ, கதைகளையோ, செய்யுட்களையோ எழுதுவார்கள். இந்தப் பழக்கத்தால் மாணவியரிடையே உற்சாகமும், ஊக்கமும் ஏற்படுகின்றன. மாணவியர் தத்தம் கற்பனைக்கு ஏற்ப எழுதும் பழக்கம் உண்டாகிறது.

இத்தகைய பத்திரிகை எங்கள் பள்ளிக்கூடத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. அது ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் வெளியாகின்றது. இது ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, சித்திரம் என நான்கு பிரிவுகளை உடையது. இப்பகுதிகள் எல்லாவற்றிலும் முதல் அமைப்பிலிருந்து, ஆறும் அமைப்புவரை உள்ள மாணவியர் யாவரும் கட்டுரை வழங்குவர். ஆண்டிற்கு ஒருமுறை ஒவ்வொரு வகுப்பும் தயாரிக்கும் வகுப்புப் பத்திரிகையிலிருந்து சிறந்த கட்டுரைகள் இதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. கட்டுரைகள், கதைகள் தவிர முக்கியமான பள்ளி நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெறுகின்றன. அதோடு அவ்வருஷத்திய ஆறும் வகுப்பு மாணவியர், பள்ளி மாணவத் தலைவியர் இவர்களுடைய புகைப்படங்களும், மாணவியர் சங்கம், ஆசிரியர் சங்கம் இவைகளின் ஆதரவில் நடக்கும் நாடகங்கள், பள்ளி ஆண்டு விழா, விளையாட்டுவிழா முதலியவற்றின் போது எடுத்த புகைப் படங்களும் வெளிவரும்.

இப்பத்திரிகையில் ஒவ்வொருவரும் தவருமல் பார்க்கவேண்டிய பகுதி பள்ளி நாட் குறிப்புக்கள் ஆகும். பள்ளி திறந்ததிலிருந்து அன்றுடம் நடக்கும் நிகழ்ச்சிகள் யாவும் இதில் குறிக்கப்பட்டிருக்கும். வருட இறுதியில் நாம் அவற்றைப்பார்க்கும் போது எத்தனை அலுவல்களை நாம் நடத்தி இருக்கிறோம் என்பதைக் கண்டு வியப்படையாமல் இருக்கமுடியாது.

இப் பத்திரிகையை உருவாக்கிக் குறித்தகாலத்தில் வெளியிடுவதற்கு பள்ளித்தலைவியே பொறுப்பாளி. அவர் ஆசிரியைகளும் மாணவியர்களும் அடங்கிய பத்திரிகைக் குழுவினர் உதவியால் ஆண்டு தோறும் சிறந்தொரு பத்திரிகையை வெளியிடுகின்றார். இதுவரை பதினேழு ஆண்டு மலர்கள் வெளியாகி உள்ளன. மார்ச் மாதத்தில் வரப் போகும் பதினெட்டாவது மலரை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். பள்ளியில் தற்போது படித்துக்கொண்டிருக்கும் மாணவியருக்கும், பள்ளிப் பழைய மாணவியருக்கும் பெற்றோருக்கும், பள்ளியின் வளர்ச்சியில் ஊக்கம் கொண்ட அன்பர்களுக்கும் இது மிகவும் பயன் படும்.

இப்பத்திரிகை மேன்மேலும் வளர்ந்தோங்க சகலகலாவல்லி அருள் புரிவாளாக.

A. லக்ஷ்மி, V-C.

எத்தனை புடமிட்டாலும் இரும்பு பசும பொன்னாகாது

அமரர் கல்கியின் மறைவு

அந்த நாள்! ஆம் வாழ்க்கையிலேயே மறக்கமுடியாத அந்த நாள்! அறிஞர் கல்கி அமரரான நாள்! கலை உலகம், இலக்கிய உலகம் ஒரு அபூர்வ மாணிக்கத்தை இழந்த நாள்!

5–12–'54 நம் வாழ்க்கையிலே மறக்க முடியாத ஒரு நாளாகும். ஏன்? அன்று தான் "கல்கி" திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இலக்கிய வானிலே அணையா ஜோதியானார். மக்கள் துயர்க் கடலில் ஆழ்ந்துதத்தளித்தனர்.

"கல்கி" சிறந்த சிந்தனையாளர். அவரது "சிவகாமியின் சபதம்" "பார்த்திபன் கனவு", "பொன்னியின் செல்வன்" போன்ற நவீனங்களும், வரலாற்று நூல்களும் நூல் நிலையங்களுக்கு அழகுதரும் அணிகள். அவரது வருணனைகள் சிறப்பு வாய்ந்தவை.

"கல்கி" பெரிய எழுத்தாளர் மட்டுமல்ல. சிறந்த ஹாஸ்ய எழுத்தாளரும், கவிஞரும் ஆவர். அவர் ஒரு பெரிய விமர்சகர். பாரபட்சமின்றித் தம் பத்திரிகையில் நகரத்திலும், வெளியூர்களிலும் நடக்கும் பல சங்கீத, நாடகநிகழ்ச்சிகளைப்பற்றி விமர்சனம் எழுதுவார். ஆகவே அநேகர் அவருடைய பாராட்டுதலுக்கு விழைவதுண்டு.

அவர் நம் பள்ளியின் அத்தியந்த நண்பர். பலமுறை அவர் நம் பள்ளிக்கு வந்து நம் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நம்மைப் பாராட்டியும் ஊக்கியும் உள்ளார். அவருடைய பத்திரிகையிலும் நம் பள்ளியைப்பற்றிய விமரிசனம இடம் பெற்றிருக்கிறது. அவருடைய மறைவினால் நம் பள்ளி ஓர் சிறந்த நண்பரை இழந்தது என்றே சொல்ல வேண்டும்.

மேலும் அவர் பூதவுடல் நீத்தாலும் அவரது ஆன்மசக்தி நம் பள்ளியில் நிலவுகிறது என்பதற்கு அத்தாட்சியாக அவரது புகைப்படம் ஒன்று நம் பிரார்த்தனை மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது. மயிலையிலுள்ள பல்வேறு சங்கங்களும் திரு "கல்கி" அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு பொதுக்கூட்டம் நடத்தி, அச்சமயம் மேன்மை தங்கிய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட உருவப்படத்தை ஏகமனதாக நம் பள்ளிக்கு அளித்துள்ளது பெருமைப்படத்தக்க ஓர் விஷயமாகும்.

என்னே இவரது புகழ்! என்னே இவரது மாண்பு!

K. சாந்தி, V-D.

N. Shantha, I-B.

குணம் இல்லாதவனுடைய அழகு வீண்

என் வீடு

உலகத்தில் கோடிக்கணக்கான மக்கள் ஓலை வீடு, ஓட்டு வீடு, மாடி வீடு முதலியவற்றில் குடியிருக்கின்றனர். இவைகளில் சிலருக்குச் சொந்த வீடு இருக்கிறது. சிலர் வாடகை வீடுகளில் வசிக்கின்றனர். ஆனால் நான் குடியிருக்கும் வீடு என் சொந்த வீடு. மற்ற வீடுகள் கட்டுவதற்குத் தேவையான கல், மண், மணல், மரம், சுண்ணும்பு முதலியன என் வீட்டுக்குத் தேவையில்லை. இது மாமிசத்தால் ஆன வீடு. இதைக் கட்ட பொருட்செலவே இல்லை., ஆனால் நம்மைப் போன்ற மனிதர்களாகிய கொத்தர்கள் இதைக் கட்டவே முடியாது.

இவ்வீட்டில் காற்று வசதி, தண்ணீர் வசதி, சுகாதார வசதி, உணவு ஆகிய சகல வசதிகளையும் இவ்வீட்டைக் கட்டியவர் அமைத்திருக்கிறார். இவ்வளவு நல்ல வசதியுள்ள வீட்டைக் கட்டியவர் யார்? அவர் பெயர் என்ன? அவர் வயது என்ன? அவர் எங்கு வசிக்கிறார்? என்ற இவை பற்றி யாருக்கும் தெரியாது. அவரைப் பார்க்கலாம் என்றால் காணவும் முடியாது. அப்படிப்பட்ட பெரியவர் என் வீட்டை அன்புடன் கட்டியிருக்கிறார்.

என் வீடு எப்போதும் அஸ்திவாரத்துடன் நகரும் சக்தி உள்ளது. இவ்வீட்டின் அஸ்திவாரம் பலமான இரண்டு தூண்கள்தான். இவற்றின் மேல்தான் என் வீடு கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் ஆகாரம், தண்ணீர் முதலிய பொருள்களை வைக்க நல்ல தொட்டிகளும், அவைகள் வெளியிலிருந்து உள்ளே போகச் சரியான பாதைகளும் உண்டு. அவைகளைப் பிசையக் கருவிகளும் உண்டு. வெளியேயுள்ள பொருள்களை எடுக்கவும், உள்ளே செலுத்தவும் இரண்டு கோல்கள் உள்ளன.

இவ்வீட்டின் கூரைமேல்தான் அதிசயமான பாகங்கள் அமைந்திருக்கின்றன. இதன் உச்சியில் கறுப்பு ஓலை வேயப்பட்டிருக்கிறது. நான் என் வீட்டில் இருந்து கொண்டே வெளியே நடப்பவற்றைப் பார்க்கக் கதவுகளுடன் கூடிய இரு ஜன்னல்கள் இருக்கின்றன. சத்தத்தைக் கேட்க ஒலிக்கருவிகளும், நன்மை தீமைகளை யறிய ஆராய்ச்சி சாலையொன்றும் உள்ளன. இவ்வளவு சிறந்த என் வீட்டில் யாரும் நுழைய முடியாது. இவ்வீட்டிலுள்ள பொருள்களை என்னைத் தவிர யாரும் உபயோகிக்க முடியாது. இவ்வீட்டைக் கட்டியவர் எப்போது என்னை அழைத்தாலும் நான் வெளியே சென்று விடுவேன். பிறகு உள்ளே வரமுடியாது.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்தது என் வீடாகிய உடல். 'அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என்னும் வாக்கிற்கிணங்க நாம் பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றுள்ளோம். பரமனால் படைக்கப்பட்டு, பரமன் குடிபுகுந்திருக்கும் வீடாகிய இந்த உடலை நாம் பரிசுத்தமாக வைத்துக் கொள்வது நமது கடமையாகும்.

S. சாந்தா, IV-A.

பக்தி

பக்தி என்பது நாம் பெரியோர்களிடம் காட்டும் அன்பும் பணிவுமாகும். இது தெய்வபக்தி, குருபக்தி, பெற்றோரிடம் பக்தி, தேச பக்தி எனப் பல வகைப்படும்.

கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருடைய இச்சைப் படியே யாவும் நடக்கின்றன. இவ்வுலகையும், அதில் அடங்கியுள்ள பல பொருள்களையும், நம்மையும் சிருஷ்டித்தவர் அவரே. ஆகவே அதை உணர்ந்து நம் குறுகிய வாழ்க்கையில் நாள்தோறும் சில நிமிஷங்களாவது அவரது அருளைப் பெற விரும்பி அவர்பால் செலுத்தும் நம் நினைவை பக்தி எனலாம்.

கடவுளுக்கு அடுத்தபடியாக நம்முடைய ஞானக்கண்ணைத் திறந்துவைக்கும் குருவிடம் நாம் பக்தி செலுத்த வேண்டும். அடக்க ஒடுக்கத்தோடு, அவர் போதிக்கும் கல்வியை நாம் கற்போமானல் நாம் பேரறிவு படைத்து விளங்குவதோடு நம் குருவுக்கும் பெருமை தேடித்தருபவர்களாவோம்.

நம்மை இவ்வுலகில் ஆண்டவன் பிறப்பித்ததிலிருந்து நம் வாழ்நாள் பூராவும் நம் இன்பதுன்பங்களில் பங்கெடுத்துக் கொள்பவர் நம் மாதா பிதாக்களே. நாம் பள்ளி செல்வதற்கு முன் கற்க வேண்டிய சில பாடங்களைக் கற்பிப்பவர்களும் அவர்களே. ஆகவே ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்னும் சான்றோர் வாக்கிற்கிணங்க என்றென்றும் நாம் அவர்களிடம் பக்தி உடையவர்களாக இருக்க வேண்டும்.

கடவுள், குரு, மாதா, பிதா இவர்களிடம் முறையே பக்தி பூண்டிருக்கும் ஒருவன் தான் பிறந்த தாய்நாட்டின் மேல் பக்தி செலுத்தாமலிருக்க முடியாது. தன் உயிரையும் அர்ப்பணித்து தேசத்தைக் காக்கத்தக்க வல்லமையை அவன் தானே பெற்று விடுவான். தேசத்திற்காக நாம் அரும்பெரும் காரியங்களைச் சாதிக்க முடியாவிட்டாலும் நம்மாலியன்ற அளவு தேசத்திற்குத் தொண்டு புரியலாம்.

ஆகவே மேற்கூறியவற்றை மாணவியராகிய நாம் பின்பற்றி நல்வாழ்வு வாழ்வோமாக.

T. R. காயத்ரி, IV-B.

P. K. Suseela, IV-D.

இமயத்தின் மகுடம்

வானளாவிய சிகரங்கள் பல இமய மலைத்தொடரில் உள்ளன. அவற்றுள் மிக உயர்ந்தது எவரெஸ்டு சிகரம். இதன் உயரம் சுமார் 29,000 அடி. இது நேபாள நாட்டிலுள்ளது. இதுவே உலகிலுள்ள மலைச் சிகரங்களில் உயர்ந்தது.

'இமயத்தின் மகுடம்' என்று சொல்லக் கூடிய எவரெஸ்டு சிகரத்தை அடைவதற்கான முயற்சிகள் நூறு வருஷ காலமாக நடந்து வந்திருக்கின்றன. இச்சிகரத்திற்குக் கால் நடையாகச் சென்று இங்குள்ள அற்புதங்களைக் காணவேண்டும் என்ற அவா மேனாட்டவர் பலருக்கு இருந்தது. இரண்டு காரணங்களால் அது முற்றுப் பெருதிருந்தது. இச்சிகரத்தை அடையும் எண்ணமுடையவர்கள் திபெத்து நாட்டு வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அவர்களுக்கு அவ்வரசாங்கம் 1920ம் ஆண்டுவரை அனுமதியளிக்க வில்லை. மேலும் மலைப்பயணம் அபாயகரமானது. மேலே போகப் போகக் காற்றின் அழுத்தம் குறைந்து விடுவதால் சுவாசிப்பது கஷ்டம். மலைத்தொடரில் எளிதாகச் செல்வதற்கு நடைபாதைகளும் கிடையா. இவ்வளவு இன்னல்களும் இடையூறுகளும் இருந்த போதிலும் சிகரத்தை அடையவேண்டும் என்னும் அவா மட்டும் நீங்க வில்லை. இயற்கைக் காட்சிகள் மலிந்து கிடப்பதும், உள்ளத்திற்கும் உணர்விற்கும் இனிய விருந்தளிப்பதுமான சிகரத்தை எட்டிப் பிடிப்பதையே தம் லக்ஷியமாகக் கொண்டனர்.

'அருவினை என்ப உளவோ கருவியாற்
காலமறிந்து செயின்'

என்னும் வாக்கிற்கிணங்க பலர் திபெத்து அரசாங்கத்தினிடம் அனுமதி பெற்று இரு முறைகள் சிகரத்தை அடைய முயன்றனர். ஆனால் எண்ணம் ஈடேற வில்லை.

முதன் முதலாக எவரெஸ்டு சிகரத்தில் ஏறி நின்ற பெருமை நம் நாட்டவரான டென்சிங்கு என்பார்க்கும், நியூஸீலாண்டைச் சேர்ந்த எட்மண்ட் ஹில்லரி என்பார்க்குமே உரித்தாகும். அடைதற்கரிய இச்சிகரத்தை இவர்கள் 1953 ஆம் ஆண்டு மே மாதம் 29ந் தேதி அன்று எட்டிப் பிடித்து, தத்தம் நாட்டுக் கொடிகளை அங்கே நாட்டி உலகத்தையே பிரமிக்கச் செய்தனர். என்னே இவரது ஊக்கமும், தளரா முயற்சியும்!

R. வேதவல்லி, IV-C.



M. Dhanalakshmi, III-E.

உலக சமாதானம்

சமாதானம் என்பதற்கு அமைதி, சாந்தி என்பதே பொருள். இது பகுத்தறிவற்ற பிராணிகள் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை யாவருக்கும் அத்தியாவசியம். ஆனால் கடவுள் சிருஷ்டியில் மேற்படியிலிருக்கும் மனிதன் சமாதானத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்து அதைக் கடைப்பிடிக்க முயல வேண்டும்.

மண்ணாசையாலும், பிறர் ஆதிக்கம் இல்லாது தன் ஆதிக்கமே உலகெங்கும் பரவ வேண்டும் என்னும் பேராசையாலும் ஏற்படுவதே போர். இதுகாறும் ஏற்பட்ட முதல் உலக மகாயுத்தம் போன்ற பல போர்களும் மண்ணாசையால் ஏற்பட்டதே. இறுதியில் பல நாடுகள் அடிமைகளாயின. சுருங்கக் கூறினால் ஒரு நாடு மற்றொரு நாட்டை நம்புவதில்லை. எங்கும் கலகமும், குழப்பமும், சந்தேகமும், கவலையுமே நிறைந்துள்ளன. போரினால் மக்கள் துன்புறுவர். பண்டங்களின் விலை வாசிகள் ஏறிவிடுகின்றன. பணப் பஞ்சமும், வேலையில்லாத் திண்டாட்டமும் தலைவிரித்தாடுகின்றன. ஆகவே இத்துணை இன்னல்களை இழைக்கும் போரிலிருந்து உலகம் விடுபட்டு சமாதானத்தை நாடும் வழியை நாமே வகுத்துக் கொள்ள வேண்டும்.

சமாதானத்தையே குறிக்கோளாகக் கருதும் நாடு எல்லாத்துறைகளிலும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்து வெற்றி பெறும். நம் தேச பிதாவாகிய மகாத்மா காந்தியடிகள் கத்தியின்றி இரத்தமின்றிச் சாத்வீக முறையில் அன்னியரை வென்று நம் தேசத்திற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். இவருடைய தீரச் செயலைக்கண்டு உலகமே வியக்கின்றது. நம் பிரதமர் ஜவஹர் தற்போது உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். எனவே தம் 'பஞ்சசீலக்கொள்கை' என்னும் கருவியுடன் உலக நாடுகளுக்கெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து சமாதானத்தின் அவசியத்தைப் பற்றிப் பிரசாரங்கள் செய்து வருகின்றார். இவரது மதிப்பு மிக்க வார்த்தைகளுக்குச் செவி சாய்த்துப் பல நாடுகளும் இச்சமாதானப் பாதையைப் பின்பற்ற வாக்களித்துள்ளன.

ஆகவே இனியேனும் உலகத்தில் பயங்கரப்போர்கள் குறைந்து, அழிக்கும் சக்தியாக இதுகாறும் பயன்பட்டு வந்த அணுச்சக்தி ஆக்கும் சக்தியாக மாறி, உலக சமாதானத்திற்கு ஓர் கருவியாகத் திகழ வேண்டுமென்று நாம் பிரார்த்திப்போமாக.

A. லக்ஷ்மி, IV-D.



E. Vasantha, IV-D.

கற்ற மனிதன் ஒரு குளம்; அறிவுடையவன் ஒரு ஊற்று

சென்னைக் கடற்கரை

கடற்கரை என்றதும் நம் அனைவர் மனதிலும் இன்பம் பொங்குகிறது. அந்த இன்ப அலைகள் நம்மைச் சென்னைக் கடற்கரைக்கு இழுத்துச் செல்கின்றன. நம் மனம் அந்த இன்ப அலைகளின் காந்த சக்தியிலிருந்து மீள முடியாது. ஆகவே அவ்வின்ப அலைகளைப் பின் தொடர்ந்து சென்று இன்பக் கடலில் மூழ்கித்தான் வருவோமே.

மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும் மாலைவேளையில் அனைவரும் நாடிச் செல்லும் இடம் கடற்கரைதான். சினிமா, நாடகம் முதலிய கேளிக்கைகளுக்கு எல்லோரும் செல்வது சாத்யமல்ல. ஆனால் கடற்கரைக்கோ பெண்டிர், ஆடவர், ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், குழந்தைகள், முதியவர்கள் யாவரும் வருகின்றனர். கடற்கரையின் சிறப்பை உணர்த்த இது ஒன்றே தக்க சான்றாகும் அல்லவா?

கடற்கரையை அடைந்ததுமே தூரத்தில் வானமும் கடலும் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டிருக்கும் 'தொடுவானக் காட்சி' நம் மனத்தைக் கவருகிறது. அடுக்கடுக்காய் கரையில் வந்து மோதும் அலைகளின் அழகை என்னென்று கூறுவது! அவ்வலைகள் ஒன்றோடொன்று உராய்வதால் ஏற்படும் வெண்மையான நுரையினழகே அழகு! கடல் நடுவில் மிதந்து செல்லும கப்பல்களும், தோணிகளும், நம் கவனத்தை ஈர்க்கின்றன.

நாம் இக்காட்சிகளில் ஈடுபட்டிருக்கையில் சிறுவர்களும், சிறுமிகளும் மணலில் தமமை மறந்து விளையாடுகின்றனர். சில குழந்தைகள் தம் பெற்றோருடன் அலைகளில் நின்று அவை ஓடி வந்து திரும்பும் விநோதத்தில் ஈடுபடுகின்றனர். கடற்கரைக்கு வர ஒருவருடைய உத்தரவோ, கட்டுப்பாடோ கிடையாதல்லவா?

சென்னைக் கடற்கரை காட்சிக்கினியது. விசாலமான ரஸ்தாவின் ஒரு புறத்தில் கண்ணைக்கவரும் பல வர்ணங்கள் கொண்ட மலர்ச் செடிகள். மற்றொரு புறம் தலை தூக்கி நிற்கும் உயர்ந்த அரசாங்கக் கட்டிடங்கள். அவற்றில் முக்கியமானவை கலங்கரை விளக்கம், பர்மா ஷெல் கம்பெனி, மேரி ராணி கல்லூரி, அகில இந்திய வானொலி நிலையம், செட்டி நாட்டு ராஜா அரண்மனை முதலியன. கடற்கரையின் ஒரு கோடியில் சென்னைத்துறைமுகமும் மற்றொரு கோடியில் அடையாறும் இருக்கின்றன.

கவலை உள்ளத்தை வாட்டும் போது நாம் கடற்கரைக்குச் சென்றால் மனதிற்குச் சாந்தி கிடைக்கும். கடற்கரைக்கு வரும் அநேகர் கற்பனையில் ஆழ்வர். இங்கு வீசும் காற்று மனதிற்குத் தெமபையும், உடலிற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது. கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் ரேடியோவின் வாயிலாகச் சிறந்த சங்கீதத்தையும், பிரசங்கங்களையும் நூற்றுக் கணக்கான மக்கள் கேட்டு ஆனந்த மடைகின்றனர்.

சென்னை வாசிகள் இத்தகைய வசதிகளுள்ள ரம்மியமான கடற்கரையைப் பெற்றிருப்பது அவர்களுடைய அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

S. வைதேகி, IV-E.

கருமத்தை முடிக்கிறவன் கஷ்டத்தைப் பாரான்

புயலின் செயல்

அப்பப்பா! என்ன கோரச்செய்தி! இந்தப் பாழாய்ப் போன புயலினால் வந்த கேடல்லவோ இத்தனையும்! எத்தனை பேருக்குக்காயம்! எத்தனை உயிர்கள் மாய்ந்தன! எத்தனை குடிசைகள், வீடுகள் நாசமடைந்தன! வயல்களில் செழித்து வளர்ந்த பயிர்களின் அழிவு செல்லி முடியாமல் அல்லவா இருக்கிறது! புயலின் அறிகுறியான கனத்த மழையால் இந்த விபரீதங்கள் ஏற்படுகின்றனவே!

செய்தித்தாளிலிருந்து அறிந்த செய்திகள் சில, "பேய்க்காற்றும், பெரு மழையும் விளைத்த தொல்லைகள்; ஆடு, மாடு, வீடு, ரோடு நாசம்; வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட வேதாரண்யம்; திருத்துறைப்பூண்டியில் புயல்; ராமநாதபுரத்தில் 'இரண்டே' நாட்களில் 'ஒரு வருட' மழை; மதுக்கூரில் '10,000' அரிசி மூட்டைகள் நாசம்; சிதம்பரத்தில் 10 அங்குல மழை............"

போதுமா! இன்னமும் வேண்டுமா? ஐயோ! அற்பக் காற்றிற்கு இவ்வளவு சக்தியா.

நெருப்பு அணைக்கும் இயந்திரத்தின் மூலம் ஒருவாறு தீவிபத்தினால் அதிகச் சேதம் ஏற்படாமல் தடுக்கலாம். ஆனால் புயலைத்தடுக்க எந்த உபாயத்தையும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை போலிருக்கிறது. புயல் வீசும் என்பதை ஒருவாறு அறிகிறார்கள். ஆனால் அதன் விளைவைப் பற்றி அறிய முடிவதில்லை. என்ன கொடுமை!

சமீபத்தில் தஞ்சையிலும் அதை அடுத்துள்ள பிரதேசங்களிலும் ஏற்பட்டுள்ள சேதம் ஈடுசெய்ய முடியாதது. பலவித உதவி நிதிகளையும், உணவுப்பொருள்களையும், வஸ்திரங்களையும் திரட்டி அனுப்பினாலும் அவை சில நாளைக்குத்தான் போதுமானவை. ஆகவே நிரந்தரமான உதவிகளைச் செய்யச் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். குடியாட்சியில் எந்தப் பிரஜையும் துன்பப்படவேண்டியதில்லை. சர்க்கார் உடனே அவன் துன்பத்தைப் போக்க வழிதேடும்.

இப்பொழுது குடியானவர்களுக்கு ஆடு மாடுகள் வாங்கவும், குடிசைகளைச் சீராக அமைக்கவும் வட்டியில்லாமல் கடன் கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது. இன்னும் இதைப் போன்ற பல உதவித்திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதைச் செய்தித்தாள்கள் மூலம் அறிகிறோம். புயலின் சதியால் துயர்ப்படும் மக்களுக்கு இந்த ஆதரவு ஓர் அளவு ஆறுதல் அளிக்கும்.

D. ஹேமாவதி, III-A.



V. A. Rajalakshmi, VI-A.

கனவும் நனவும்

அன்று என்று மில்லாமல் காலைக் காட்சி ஔவையார் பார்க்க நானும் என் தாயாரும் சென்றிருந்தோம். வீடு திரும்பியதும் அம்மாவின் சிநேகிதிகள் இருவர் அங்கு காத்திருக்கக் கண்டோம். இடைவேளை உணவருந்திக் கொண்டே அவர்கள் படக்காட்சியைப் பற்றியும் ரசமான சில காட்சி ஜோடனைகளைப் பற்றியும் பேசினார்கள். கைலாசத்தைப் பற்றிய பேச்சுத்தான் அதிகமாக என்காதில் விழுந்தது. அரைகுறையாகக் கேட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் படுத்திருந்த நான் சற்று நேரத்தில் கைலாசக் காட்சியை நேரில் காண ஆரம்பித்தேன்.

பரமசிவன் கழுத்தில் அணிந்த பாம்புடன் மலைமீது வீற்றிருந்தார். எங்கும் ஒரே புகை மயம். ஒரு பக்கத்தில் நந்திதேவர். அங்கங்கே தவம் செய்யும் ரிஷிகள். திடீரென்று மத்தள ஓசை கேட்டது. கூடவே 'நடனமாடினார்' என்ற பாடலும் ஆரம்பமாயிற்று. தாளத்திற்கேற்றபடி கால்வைத்துப் பல படிகள் இறங்கி சிவபெருமான் வந்து அலங்காரமான ஒரு மேடையில் நடராஜனாக அசைவற்றுச் சிலவினாடிகள் நின்றார். மறுபடியும் அதேபல்லவி பாடப்பட்டது. நானும் மெல்ல அடிமேல் அடி வைத்துச் சென்று அவர் அருகே அபயகரத்துடன் நின்றேன்.

பாட்டின் முதல் அடி மூன்றும் முறை தொனித்தது; தாள வாத்தியங்களும் அதற்கேற்ப முழங்கின. பரமசிவனுக்கு இணையாக நானும் அவருடன் ஆடினேன் பாட்டு முடியும் வரை. அதையடுத்து துரிதகாலத்தில் சில வினாடிகள் போட்டி நடனம். ஆனால் அது முடியுமுன்னால் தளர்ந்து தொப்பென்று விழுந்தேன்.

“கலா! தூங்கிவிட்டாயா அதற்குள். வா! சீக்கிரம் முகத்தை அலம்பிக்கொண்டு வந்து அந்தச் சிவபார்வதி நடனத்தை ஒருமுறை ஆடு பார்க்கலாம். பிரேமா உனக்காகக் காத்திருக்கிறாள்,” என்றாள் என் தாயார். பிரேமா என்னை ஒரு குலுக்குக் குலுக்கி “உம், சரியாக நாலு மணிக்குக் கதம்ப நிகழ்ச்சி ஆரம்பம். அதற்குள் ஒரு முறை ஆடிப் பார்க்கலாம், எழுந்திரு!” என்றாள். எனக்கு ஒரே பிரமையாக இருந்தது. பிரேமா கழுத்தில் சற்று முன் நெளிந்து நெளிந்து படமெடுத்த பாம்பைக் காணவில்லை. நான் கண்டது கனவோ?

R. கலாவதி, III-B.



C. T. Sugantha, V-D.

சென்னையில் நேரு

மாஸ்கோவிற்குச் சென்று திரும்பி வந்த நமது பாரத நாட்டுப் பிரதம மந்திரி பண்டிட் நேரு அப்போதுதான் முதன் முறையாகத் தெற்கே விஜயம் செய்தார். அவர் தமது பிரயாண அனுபவத்தைக் கூறப்போகிறார் என்று சென்னை மக்கள் அனைவரும் அக்டோபர் 2-ம் தேதியன்று கடற்கரையில் திரண்டு இருந்தனர்.

அன்றுதான் "மாந்தருள் தெய்வம்" என்று உலக மக்கள் எல்லோராலும் புகழப்படும் நமது மகாத்மா காந்தியின் பிறந்ததினம். அன்று நேரு 1-15 மணிக்கு பகல் வேளையில் ஆகாய விமானத்தில் சென்னையை அடைந்தார். அவருடன் அவருடைய பெண் இந்திரா காந்தியும் வந்திருந்தார். நேரு சில அலுவல்களைப் பார்த்து விட்டு மாலை ஆறு மணிக்குக் கடற்கரையை அடைந்தார்.

கடற்கரையில் முன்னேற்பாட்டின் படி எல்லா சௌகரியங்களையும் சென்னை அரசாங்கத்தார் செய்து இருந்தனர். செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் மேல் தளத்தில் நின்று பண்டிட் நேரு அவர்கள் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கு நேர் எதிராக மணலில் மக்கள் உட்கார இட வசதி செய்யப்பட்டு இருந்தது.

பேச்சுத் தொடங்குவதற்கு இரண்டு மணி நேரம் முன்பே மக்கள் திரள ஆரம்பித்தார்கள். சாயுங்காலத்தில் சமுத்திரக்கரையில், மணல் மேட்டில் ஒரு பெரிய திருவிழாக் கூட்டம் கூடியது. சென்னை அரசாங்கமும் மிக்க ஊக்கத்துடன் எல்லா வசதிகளையும் செய்து இருந்தது.

நேரு அவர்கள் பேசியதை மக்கள் ரஸித்துக் கொண்டிருந்தார்கள். ஏழைகளும், பணக்காரர்களும், கிழவர்களும், குழந்தைகளும், ஆண்களும், பெண்களும், அதிகாரிகளும், தொழிலாளிகளும், ஜாதி மத நிறபேதமில்லாமல் ஒரு வித மனக்குறையும் வேறுபாடு மில்லாமல் இரண்டு மணி நேரம் பேச்சை ரசித்தார்கள்.

நேரு அவர்கள் பேசுகையில் சென்னை மாநகரத்தை வெகுவாகப் புகழ்ந்தார். மாஸ்கோவில் இருந்து ரஷ்ய அரசாங்கத்தார் நவம்பர் மாதத்தில் வரப் போவதையும் அவர்களுக்கு நாம் எவ்வித மாரியாதை காட்ட வேண்டும் என்றும், நாம் எவ்வளவு ஒழுக்கத்துடனும், ஒற்றுமையுடனும் இருக்கவேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்து உரைத்தார் அவர் கூறியதை மக்கள் மிகவும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அவர் சொற்பொழிவிலிருந்து அன்னியர்களுக்கு நம்மிடம் எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பது தெரிய வந்தது. அதைக் காப்பாற்றுவது நமது கடமை என்றும் புலனாயிற்று. வானம் நன்றாக இருட்டியும் மக்கள் சிறிதும் அசையாமல் இருந்து நேருவின் அறிவுரையைக் கேட்டனர். ஜே கோஷங்களுக்கிடையே நம் பாரதத் தாயின் தவப் புதல்வர் தம் இருப்பிடம் சென்றார். கூட்டமும் கலைந்தது.

R. S. ஜயந்தி, III-C.

சொற் பொழிவுகளால் ஏற்படும் பயன்கள்

நாம் நம் வாழ்க்கையில் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல. நம் வாழ்நாளோ மிகக்குறைவானது. எனவே கற்கவேண்டிய பல விஷயங்களையும் குறுகிய காலத்தில் கற்பது கடினம். ஆகவே நாமே கற்கவேண்டியவற்றைக் கற்றும், பிற விஷயங்களைப் பலர் சொல்லக் கேட்டும் நாம் தெளிவடைய வேண்டும். இதற்குச் சாதனமாயிருப்பது சொற்பொழிவுகளே.

அறிவு முதிர்ந்த பெரியோர்களால் நிகழ்த்தப்படும் சொற் பொழிவுகளைக் கேட்பதால் நம் அறிவு விசாலமடைவதோடு, பல உயர்ந்த கருத்துக்களையும் நாம் உணர முடிகிறது. நகைச்சுவையும், பொருளழகும் மிகுந்த சொற் பொழிவுகளே மக்களின் மனத்தைக் கவர்கின்றன. உணர்ச்சியூட்டும் சொற்பொழிவுகளை மெய்ம் மறந்து கேட்டு இன்பமடைபவர் பலர். ஆகவே எல்லோருடைய கவனத்தையும், மனத்தையும் கவரக்கூடிய வகையில் சொற் பொழிவாற்றுவது ஒரு கலை என்றே சொல்லலாம்.

பள்ளிகளில் மாணவர்கள் பல பெரியோர்களின் சொற் பொழிவுகளைக் கேட்கும் பல வாய்ப்புகளைப் பெறுகின்றனர். அப்பருவத்தில் அவர்கள் அதை ஒரு நிர்ப்பந்தமாக எண்ணுவர். ஆனால் அவைகளினால் ஏற்படும் பயன்களை அறியார். சாதாரணமாக நாம் பல விஷயங்களில் நமக்கு எளிதில் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிடுகிறோம். பிற்காலத்தில் நம்மால் அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள முடியாத போது, நாம் வருந்துகிறோம். ஆகவே மாணவியராகிய நாம் அவ்வப் போது நம் பள்ளியில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளைத் தவறாமல் கேட்டு, பல நன்மைகளைப் பெறலாம்.

இதனாலன்றோ திருவள்ளுவரும் "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை" என்று கேள்விச் செல்வத்தின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்!

K. மங்களம், III-D.

T. Kalavalli, III-D.

சேராத இடத்தில் சேர்ந்தால் வாராத துன்பம் வரும்

துணி சொன்ன கதை

இரவு சுமார் ஏழரை மணி இருக்கும். என் தகப்பனார் காரியாலயத்திலிருந்து வந்தார். அவர் கையில் ஏதோ பெரிய பொட்டலம் ஒன்று இருந்தது. அப்பொழுது நான் படித்துக் கொண்டிருந்தேன். என் தந்தை என்னை உரத்த குரலில் 'சாந்தா' என்று கூப்பிட்டார். குரலைக்கேட்ட நான் கீழே ஓடி வந்தேன். என் தகப்பனார் பொட்டலத்தைப் பிரித்தார். அதில் நான் வெகு நாளாக விரும்பிய சீட்டிப்பாவாடையும், சட்டையும் வாங்கி வந்திருந்தார். நான் அதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இரவு வெகுநேரமாகியிருந்ததால் உணவு அருந்திய பின் படுக்கச் சென்றேன். மற்றுமொரு முறை என் பாவாடையைப் பார்க்க ஆவலாயிருந்ததால் அதைப்பிரித்துப் பார்த்துவிட்டு, என் அருகில் வைத்துக் கொண்டே கண்ணயர்ந்தேன். கொஞ்ச நேரத்தில் 'சாந்தா' என்றது ஒரு குரல். பாவாடைத்துணி பேசியது. 'சாந்தா' என்னை விட பட்டுப்பாவாடையைத் தான் நீ அதிகம் விரும்புகிறாய் என்பதை நான் தெரிந்து கொண்டேன். பக்கத்து வீட்டுப் பங்கஜம் என்னைப்பார்த்து ஏளனமாகச் சிரித்தபோது, 'அடுத்த தடவை பட்டுப்பாவாடைதான் வாங்கிக் கொள்வேன்' என்று நீ பதில் சொன்னாய். நான் சொல்வதை நிதானமாய்க் கேள். பிறகு என்னைப்பற்றிய உன் அபிப்ராயத்தைச் சொல்.

நூற்றுக்கணக்கான பட்டுப்பூச்சிகளை நாசம் செய்து அவற்றின் கூடுகளைப் பிரித்து பட்டு நூல் எடுக்கிறார்கள். அதிலிருந்து தயார் செய்யப்பட்டது தான் பட்டு. ஆனால் என் வரலாறு அப்படியல்ல. கரிசல் மண் பூமியில் பருத்திச் செடிகள் செழிப்பாக வளரும். அதில் மஞ்சள் நிறப்பூக்கள் தோன்றி, பின் காயாகி, பசுமை நிறத்தையடையும். அந்தக்காய் முற்றியவுடன் தானாக வெடிக்க, அதிலிருந்து நான் வெளிப்படுவேன். 'பருத்திப்பஞ்சு' என்று அந்நிலையில் எனக்குப் பெயர். பஞ்சை சுத்தப்படுத்தி மேலே ஒட்டிக் கொண்டிருக்கும ஓடுகளை நீக்கி, உள்ளே யிருக்கும் விதைகளை அகற்றி, பிறகு 'வில்' என்ற கருவியால் நையப்புடைப்பார்கள். அதன் பின் சிறிய திரிகளாகத் திரித்து நூலாக நூற்று அதை 'திரிவட்டம்' என்னும் கருவியில் சுற்றி நூல் கற்றைகளாகக் கட்டுவார்கள். இந்நூல் கற்றைகள் பல வித வர்ணங்கள் ஏற்றப்பட்டு நெசவுச்சாலைக்கு அனுப்பப்படும். நெசவாளி பாவு அமைத்து குறுக்கு இழைகளைக்கோத்து துணியாக நெய்வான். இந்தத் துணியை அச்சுப் பூப் போடும் இடத்திற்கு அனுப்புவார்கள். அங்கு தான் என் மேல் நீ காணும் பூ மொட்டுக்களும், பூக்களும் அச்சிடப்பட்டன. இதுதான் என் கதை. இப்பொழுது சொல். வரப்போகும் பொங்கல் நன்னாளில் அணிந்து கொள்ள பட்டுப்பாவாடை வேண்டுமா, அல்லது பருத்திப் பாவாடையா?" என்று பாவாடைத்துணி பேசி முடித்தது.

நான் "சீட்டிப் பாவாடைதான் வேண்டும், உன்னைத்தான் எனக்குப் பிடிக்கிறது" என்று சொல்லி அதை இறுக அணைத்துக் கொண்டேன்.

P. R. சாந்தா, III-E.

திரு ஓணப்பண்டிகை

முன் ஒரு காலத்தில் கேரள நாட்டை மகாபலி சக்கரவர்த்தி என்பவர் ஆண்டு வந்தார். அவர் மிகவும் பெரிய கொடை வள்ளல். இல்லை என்ற சொல்லே இல்லை யென்று கூறும்படி அவர் நாட்டை ஆண்டு வந்தார். அக்காலத்தில் எல்லோரும் சமமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தார்கள். அதைக் கண்டு பொருமை கொண்ட தேவர்கள் எங்கே இந்திரனுடைய சிம்மாசனம் கைவிட்டுப் போய் விடுமோ என்று பயந்து மஹா விஷ்ணுவிடம் முறையிட்டனர். அவர் அவர்களுக்கு உதவி, செய்ய பூலோகத்தில் வாமனனாக அவதரித்தார். அவதரித்தவர் மகாபலி சக்ரவர்த்தியிடமிருந்து தனக்கு மூன்று அடி பூமி தானம் வேண்டுமெனக் கேட்டார். அப்பொழுது இல்லை என்பதே யாதென அறியாத அச்சக்ரவர்த்தி அத்தானத்திற்கு இசைந்தார்.

வாமனனாக அவதரித்த அப் பெருமான் பூமியை ஒரு அடியாலும், மற்றொரு அடியால் பாதாளத்தையும் அளந்து கொண்டு மற்ற ஒரு அடிக்கு இடம் எங்கே என்று கேட்கவே கொடைவள்ளல் சக்ரவர்த்தி தமது தலையைக் காண்பித்தார். இது ஆவணி மாதத்தில் திருஓண நட்சத்திரத்தன்று நடந்ததாக ஐதீகம் கூறுகிறது.

எம் பெருமான் காலால் உதைக்கப்பட்டு பாதாளத்திற்குச் செல்லும்போது மகாபலி சக்ரவர்த்தி தனக்கு ஒரு வரம் வேண்டும் என்று கேட்கவே எம் பெருமான் அதற்கு இசைந்தார்.

எங்கும் என்றும் சுபிக்ஷமாக இருக்கும் தன் நாட்டை வருடத்திற்கு ஒரு முறை தான் வந்து பார்க்க வேண்டும் என்பதே அக்கோரிக்கை. அப் பெருமான் அக்கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார். ஆதலால் கேரளியார் தங்களுடைய புராதன சக்ரவர்த்தி தம் நாட்டைப் பார்க்க வரும் தினத்தை ஆவணி மாதம் திரு ஓண நாளாக் கொண்டாடுகிறார்கள். இதை முற்றிலும் கேரளிய இந்துக்களே கொண்டாடுகின்றனர். இது ஒரு தேசீய கொண்டாட்டத் தினமாகவும் கருதப் படுகிறது.

புத்துடை உடுப்பதும், வீடுகளைக் சுத்தம் செய்து பூக்களால் அலங்கரிப்பதும் இந்த நாளின் முக்கிய விசேஷம். இத்தினத்தில் பெண்கள் பலவித உல்லாச விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள். இதற்கு ஓணக்களி என்று பெயர். ஆண்கள் ஒடம் விளையாட்டு, பந்து விளையாட்டு, இவைகளில் ஈடுபடுவது உண்டு. இந்த விளையாட்டிற்கு உபயோகப்படும் ஒடம் பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருக்கும். இவ்விதமாகக் கேரள நாட்டில் திரு ஓணத்தைக் கொண்டாடுவர்.

M. கோமதி, II-A.



A. Saraswathy, IV-C.

பசியின் கொடுமையை அறிந்த பணக்காரன் இல்லை

மதுரைக் கோயில்

மதுரை ஒரு பிரசித்தி பெற்ற ஸ்தலம். தமிழ்ச்சங்கத்தின் இருப்பிடம். இங்குதான் தெய்வப் புலவர் பலர் கூடியிருந்து தமிழாராய்ந்தார்கள். தமிழைக் கண் போல் போற்றி, தமிழ்ப் புலவர்களுக்கு மதிப்புக்கொடுத்து ஆதரித்து, நீதி வழுவாது செங்கோல் செலுத்திய பாண்டி மன்னர்கள் இங்குதான் அரசுவீற்றிருந்தனர்.

தமிழ் வளர்த்த தென்னாட்டில் சிறந்த கோவில்கள் பல இருக்கின்றன. அவற்றுள் மதுரை மீனாக்ஷி கோவில் மிகவும் முக்கியமானது. இது மிகவும் சிறந்த கோவில். இதற்கு நான்மாடக்கூடல் என்றும் பெயருண்டு.

இக் கோயிலைச் சுற்றிப் பெரிய மதில் சுவரும் நான்கு புறமும் உயர்ந்த கோபுரங்களும் இருக்கின்றன. கிழக்குப் பக்கத்தில் இரு கோபுரங்கள் உண்டு. ஒன்று சுவாமிகோயில் கோபுரம்; மற்றொன்று அம்மன் சன்னதியில் உள்ளது. சுவாமி கோயில் கோபுர வாசலிலிருந்து நேராக வரும்போது இரு பக்கங்களிலும் பலவித சாமான் கடைகள் காணப்படும். அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். அங்கிருந்து சிறிது தூரம் சென்றால் அம்மன் சன்னதிக் கெதிரே பொற்றாமரைக் குளத்தை அடையலாம்.

இப் பொற்றாமரைக் குளத்தில் சங்கப் பலகை இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. குற்றமற்ற காவியங்களுக்கு இடம் கொடுத்து, பிறவற்றை ஏற்க மறுத்தது இத் தெய்விகப் பலகை.

பொற்றாமரைக் குளத்தைவிட்டு நேராகச் சென்றால் எதிரே அம்மன் மூலஸ்தானம் தெரியும். ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் மரகதப் பச்சை நிறம் உடையவளாகத் தோன்றுகிறாள். கோயில் பிராகாரத்தின் தூண்கள் ஒவ்வொன்றும் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தவை. சுவாமி சன்னதிக்கெதிராக ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஒரு விசித்திரமான தூண் இருக்கிறது. இதை அமைத்தவர் இதில் சப்த நாதங்கள் எழும்படியாக அமைத்திருக்கிறார். ஒவ்வொரு சிறு ஸ்தம்பமும் தட்டினால் ஒவ்வொரு சுரத்தை வெளிப்படுத்தும்.

கோவிலில் ஆயிரக்கால் மண்டபத்துத் தூண்கள், சிவபிரானும் காளியும் நிருத்தம் செய்வது போன்ற சிலைகள், ஆகியவை நம் நாட்டுச் சிற்பச் சிறப்பை விளக்கும். பொதுவாக மதுரைக் கோவிலை மிக முக்கியமான க்ஷேத்திரமாக வட நாட்டார் கூட மதிக்கின்றனர். தென்னாட்டைச் சுற்றிப்பார்க்க வருபவரும், க்ஷேத்திராடனம் செய்ய வருபவரும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரரைத் தரிசித்து மகிழ்வர்.

V. லலிதா, II-B.



P. R. Lalitha, I-A.

இனியவை பேசுதல்

" பணிவுடையனின் சொலனாத லொருவர்க்கு
அணி; அல்ல மற்றுப் பிற "

என்றார் திருவள்ளுவர். பணிவுடைய இனிய சொற்களைப் பேசுதலே ஒருவருக்கு ஆபரணமாம். மற்றவை அணிகளல்லவாம். ஆபரணங்களை விட இனிய சொற்களே மேன்மையானவை என்றால் அவ்வினிய சொற்களை நாம் பேசுவதால் நன்மையயக்கு மல்லவா! ஒருவன் மிகப்பணக்காரனாக இருக்கலாம்! ஆனால் அவன் அமுதினுமினிய, நற் சொற்களைப் பேசாவிட்டால் அவனை எவரும் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். "அவனா, நாவினில் நற்சொற்கள் இருந்தாலல்லவா நாம் அவனுடன் பேசுவதற்கு! யாரைக் கண்டாலும் 'சள்'ளென்று சீறி விழுகிறான்! என்ன பணம் இருந்தாலும், நற் சொற்களைப் பேசாவிட்டால் யார் அவனுடன் பேசக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்று எல்லோரும் ஒதுங்கிச் சென்று விடுகிறார்கள். ஒருவன் பரம ஏழையாக இருந்தாலும் தன்னைக்காண வருபவர்களிடம் அன்பாகப் பேசினால் "பொன்னினும் உயரிய பூஷணமாக இருக்கிறது அவன் பேச்சு! அவனுடைய வார்த்தைகளே காந்தத்தைப் போல் கவரும் சக்தி பெற்றிருக்கின்றன. அவனுடன் சிறிது பேசினாலும் வெகு நேரம் உரையாட வேண்டும் போல் தோன்றுகிறது. அவனுடைய இன்சொற்களே அவனுக்குப் பணத்தையும், பதவியையும் ஒரு நாள் அளித்து விடலாம்." என்று அவனைப் பற்றி வாயாரப் புகழ்ந்து பேசுவர்.

சிலர் பணக்காரரிடமும், தமக்குச் சம அந்தஸ்து உடையவரிடமும் மட்டுமே நற் சொற்களை உபயோகித்துப் பேசுகின்றனர். பிச்சைக்காரர்களையும், வேலைக்காரர்களையும் சிலர் நடத்தும் விதத்தைப் பார்த்தால் 'தமக்கு வேண்டியவரைத் தவிர மற்றவர்களிடம் அன்பாகப் பேசுவதில்லை என விரதம் பூண்டிருக்கின்றனரோ' என நமக்கு நினைக்கத் தோன்றுகிறது. மேற் கூறிய இனத்தவரை நாம் இகழ்வது போல நாமும் பிறரிடம் அன்பாக நடந்து கொள்ளாவிட்டால் நம்மைப் பற்றிப் பிறர் இகழ்வார்களல்லவா! ஆகவே நாம் பிறரிடம் அன்பாகப் பேசவும் பழகவும் வேண்டும். இப்படி இனியவை பேசுவதால் ஏற்படும் நன்மை ஒரு புற மிருக்கட்டும். நாம் பிறரிடம் நல்ல வார்த்தைகளைப் பேசுவதால் அவர்களுக்கு இன்பம் உண்டாகிறது. 'நம்மிடம் எத்தனை அன்பாகப் பேசுகிறார்கள்' என்று நம்மிடம் நட்புப் பாராட்டவும் தோன்றும். இன் சொற்களைப் பேசுபவன் பிறருடைய நட்பையும், நன் மதிப்பையும் பெறுவான். அவ்வாறு அல்லாமல் பிறரிடம் கொடிய வார்த்தைகளைப் பேசுவான் வீண்பகையையும் பிறருடைய கோபத்தையுமே சன்மானமாகப் பெறுவான். அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடினும் 'ஏன்' என்று கேட்க ஒருவருமில்லை. பிறகு அவன் தன்னுடைய நண்பர்கள் தன்னைவிட்டுப் பிரிந்து போனதை நினைத்துப் பொருமு

வான்; மனங்குமுறுவான்; வெட்கித் தலைகுனிவான். பிறரிடம் நல்வார்த்தை களைப் பேசாத தின்னை நொந்து கொண்டு நடைப்பிணமாகத் தன்னந் தனியனாய் வாழ்க்கை நடத்துவான்.

"வில்லம்பு பட்ட புண் ஆறிவிடும்; ஆனால் சொல்லம்பு பட்ட புண் ஆறாது" என்பது எவ்வளவு பெரிய உண்மை!

V. S. ஜகதீஸ்வரி, II-C.

சுகாதாரப் பழக்கங்கள்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் மொழிக் கேற்ப எத்துணை வறியவராயிருப்பினும் நோயற்று வாழ்தலே சிறந்தது. நோயற்று வாழ வேண்டுமானால் சில சுகாதாரப் பழக்கங்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

'கந்தையானாலும் கசக்கிக்கட்டு; கூழானாலும் குளித்துக் குடி' என்பதற் கிணங்க நாம் உடுத்தும் உடைகள் மாசின்றி சுத்தமாயிருத்தல் வேண்டும். தினந்தோறும் சுத்த நீரில் உடல் அழுக் குப் போகத் தேய்த்துக்குளிக்க வேண் டும். பின்பு நன்றாக வேகவைத்துப் பக் குவப்படுத்திய உணவை உண்ண வேண் டும். நாம் உண்ணும் உணவை நன்றாக மென்று நிதானமாக உட் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் உண வைச் சாப்பிட்ட பின் உணவுத்துணுக்கு கள் பற்களிடையே இராதபடி பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.

உணவு, உடை இவைகளின் சுத்தத்தைக் கவனித்தலோடு இதர விஷயங்களிலும் சுகாதாரப் பழக்கங் களை மேற்கொள்ள வேண்டும். நம் தலையை எண்ணெயிட்டு வாரிப் பின்னிக் கொள்ளுதலும், வாரமொரு முறை தவறாது எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தலும் மிக அவசி யம். இல்லாவிடில் தலையில் பேன் உண்டாகும். அதனால் பல வியாதிகள் ஏற்படுவதுண்டு. சாதாரணமாகச் சிறு மியர் கை நகங்களைக் கடித்தலைப் பார்க் கின்றோம். அது எத்துணை அபாயகர மானது என்பதை அவர்கள் அறிவ தில்லை. நகங்களின் இடுக்குகளிலுள்ள அசுத்தங்கள் உணவோடு கலந்து, உணவுப் பொருள்களோடு நம் வயிற் றில் சென்று, பல வியாதிகளுக்குக் காரணமாகும். ஆகவே நகங்களைக் கடிக்கும் கெட்ட பழக்கத்தை நாம் எல் லோரும் அறவே ஒழிக்க வேண்டும். அதோடு ஒவ்வொரு முறை உணவு அருந்தச் செல்லும் போதும் நம் கை களைச் சுத்தமாகக் கழுவிக் கொள்ளுதல் அவசியம்.

நாம் நோயுற்ற பிறகு வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறுவதை விட, நோயைத் தடுக்கக் கூடிய சுகாதாரப் பழக்கங்களை மேற் கொண்டு இன்ப வாழ்க்கையை நடத்தலாம்.

'சுத்தமே சுகம் தரும்'

D. கலைவாணி, II-D.

என் இரயில் பிரயாண அனுபவம்

'கூகுகு' என இரயில் தான் புறப் படுவதை அறிவித்தது. உடனே பார்க்க வேண்டுமே ஜனங்களின் ஆரவாரத்தை! வருணிக்க இயலாது போங்களேன் ஒவ்வொருவரும் அவரவர் உறவினரையோ, சிநேகி தரையோ, வழியனுப்பும் விதம்! அப்பப்பா! 'ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்' நான் உட்கார்ந் திருந்த இடத்தின் அருகில் இப்படி ஒரு குரல். 'நான் சொன்னதை மறந்து விடாதீர்கள்' இப்படி ஒன்று. 'ஏண்டா பழி! வரும் பொழுது மனைவியோடு, வருவாய் இல்லையா?' இது ஓர் வாலிபன் தன் சிநேகிதனை அனுப்பும் விதம். இப்படியாக இரயிலில் அவர்களை ஏற்றி அனுப்பும் வகை ஒருபுறம் இருக்க, விற்பனையாளர், யாசிப்பவர் 'கூஜாவை மறந்து விட்டேனே', 'டிக் கெட் எடுத்து வரவில்லையே' என்று ஓட்டம் பிடிப்பவர் ஆகிய இவர்வேறு.

நான் என் தாயாருடன் சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து இரவு 9மணிக் குப் புறப்பட்டு பம்பாய் நகரத்திற்குப் போகிறவள். எதற்காகத் தெரியுமா? எனது தமையன் திருமணத்திற்காக. இரவு வேளையாதலால் சற்றுக்கண்ணை யர்ந்தேன். திடீரென்று மயக்கத்தி னின்று விழித்தவள் போல் என் அன்னையிடம், "என்ன அம்மா! என்ன கூச்சல்?" என்றேன். "ஒன்றுமில்லை, இரயில் ஒரு ஸ்டேஷனில் நிற்கிறது. அவ்வுளவு தான்" என்றாள் என் தாயார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அதற்குள் எங்கள் பக்கத்தில் இருந்த ஒருவர் தலையை வெளியே நீட்டி "ஸ்டே ஷன் இல்லையே! பின் ஏன் நிற்கிறது?" என்று மற்றொரு கேள்வியைப் போட் டார். அப்பொழுது தான் தூக்க மயக் கத்திலிருந்து தெளிந்த ஒருவர், "கை விழுந்திருக்காது, வேறென்ன இருக்கப் போறது" என்று அலட்சியமாகச் சொன்னார்.

வண்டி நடுக்காட்டில் நின்று விடவே அரைகுறைத் தூக்கத்திலிருந்தவர்கள் கூட எழுந்து கதவைத்திறந்து கொண்டு கீழே இறங்கி வண்டி நின்ற காரணத் தைக் கண்டறிய முயன்றார்கள். நானும் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தேன். இரயில் அதிகாரிகள் சிலர் நாங்கள் இருந்த பக்கமாக வந்து உள்ளே எட்டிப் பார்த்தார்கள். அவர் களைப் பின் தொடர்ந்து வந்த ஒரு கூட் டம் எங்களை வெறித்துப் பார்த்தது.

விஷயம் இதுதான்! எங்கள் எதிரில் இருந்த ஒருவன் தன் குடையை வண்டியை நிறுத்தும் சங்கிலியில் மாட்டி இழுத்து விட்டான். வண்டி நிறுத்தியது தான்தான் என்று அறியாமல் பிறரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வன், அதிகாரிகள் கண்டுபிடித்த பிறகு தான் தன் தவற்றை உணர்ந்தான். இரயில் மீண்டும் கிளம்பிற்று. வண்டி யிலிருந்தவர்கள் அந்த நள்ளிரவிலும் அகாரணமாக வண்டி நிறுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களைப் பற்றிப் பேசிப் பேசிச்சிரித்தனர்.

என் தமையன் கல்யாணச் சந்தடி யிலும் எங்கள் பிரயாண அநுபவத்தைப் பற்றிய பேச்சை மூச்சு விடாமல் பேசிச் சிரித்தோம்.

K. சூரியகுமாரி, II-E.

தற்புகழெல்லாம் தன்னிழிவாகும்

தாமரை

மலர்களில் பெரியதும், சிறந்தது மானது தாமரை. இதில் செந்தாமரை, வெண்தாமரை என இருவகையுண்டு. இவையிரண்டும் பெயருக்கேற்பச் சிவப்பாகவும், வெண்மையாகவும் இருக்கும்.

அல்லி, குவளை, நெய்தல், செங்கழுநீர், கொட்டி முதலியவற்றைப்போல் தாமரையும் நீரில் உண்டாகும். தாமரை கொடியாக வளரும். கொடியின் மேல் தான் இலைகளும் பூக்களும் உண்டாகும். தாமரைத் தண்டு முள்ளுடையது. தாமரை இலை வட்டமாயும், பெரியதாயும், மிருதுவாகவும் இருக்கும். தாமரை மலர் காலையில் மலரும்; மாலையில் குவியும்; பார்க்கப்பார்க்க அழகாக இருக்கும்.

தாமரை மலரும், தண்டும், இலையும், கிழங்கும் சில மருந்துகளுக்கு உபயோகப்படுகின்றன. கிழங்கைச் சிலர் வேகவைத்து உண்பர். இலையில் சிலர் உணவு உட்கொள்ளுவர். தாமரை இலையில் ஒருவகை எண்ணெய்ப்பசை இருப்பதால் தண்ணீர் ஒட்டுவதில்லை.

குளத்திற்கு அழகு செய்வது தாமரை. தாமரை நிறைந்த குளத்தில் குளிப்பதும், நீந்துவதும் தவறானது. தாமரைக் கொடியில் கால்கள் சிக்கினால் உயிரிழக்க நேரிடும்.

தாமரையை நம் நாட்டில் தலையில் சூடுவதில்லை. ஆனால் பர்மா நாட்டில் பெண்கள் தாமரையைத் தலையில் சூடுவார்கள். நம் நாட்டில் தாமரை மலர் மிகவும் உயர்ந்ததாகக் கருதப் படுகிறது. ஏனெனில் செந்தாமரையில் சகல பாக்கியத்தையும் கொடுக்கும் தேவியாகிய மகாலக்ஷ்மியும், வெண்தாமரையில் கலைகளுக்குத்தேவியாகிய மகா சரஸ்வதியும் வீற்றிருப்பதாக நம்புகிறோம். ஆகவே தாமரைப்பூ மிகச் சிறந்ததாக எண்ணப் படுகிறது.

A. ருக்மணி, I-A.



K. L. Shantha, III-A.

தெப்பத் திருவிழா

மயிலாப்பூரிலுள்ள கபாலீஸ்வரர் கோயிலுக்கு எதிரே ஒரு பெரிய குளம் இருக்கிறது. இது தாமரை இலைகளும் பூக்களும் நிறைந்தது. இதன் நான்கு பக்கங்களிலும் படிக்கட்டுக்கள் உள்ளன. கோயிலும் எதிரே குளமும் அதைச் சுற்றிலும் நான்கு மாடவீதிகளும் பார்க்க அழகாயிருக்கும்.

தைப்பூசத்தன்று ஆரம்பித்து தொடர்ந்து மூன்று நாட்கள் கபாலி தெப்பத்தில் வீற்று குளத்தில் சுற்றி வருவார். முதல் நாள் ஏழுசுற்றும், இரண்டாம் நாள் ஒன்பது சுற்றும், மூன்றும் நாள் பதினேரு சுற்றும் ஆகச் சுவாமி சுற்றுவார். அப்பொழுது தெப்பம் பலவித வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டு அற்புதமாக விளங்கும். பௌர்ணமி நிலவில் தெப்பத்தில் தீபாலங்காரங்களுடன் பெருமான் பவனி வரும்பொழுது சுவர்க்கலோகத்தில் இந்திரபுரி மிதப்பது போலத் தோன்றும். சிறுவர்களும் பெரியோர்களும் குளப்படிகளில் திரளாக நின்று இக்காட்சியைக் கண்டு களிப்பார்கள். குளத்தின் நடுவில் இருக்கும் நீராழி மண்டபமும் தீபாலங்காரங்களுடன் ஜகஜ்ஜோதியாய் விளங்கும். தெப்பத்தின் நிழல் தண்ணீரில் விழும்பொழுது மிக அழகாய் இருக்கும்.

தெப்பத் திருவிழாவைக் காணப் பல இடங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடுவார்கள். மாடவீதிகளில் பல விதமான கடைகளும், ரங்கராட்டினம், பொம்மலாட்டம் முதலிய வேடிக்கைகளும் இருப்பதால் தெருக்களிலும் ஜனக் கூட்டம் அதிகமாகவே இருக்கும். இரவு வெகு நேரத்திற்குப் பிறகுதான் கூட்டம் கலையும்.

S. வனஜா, I-B.



S. Jayalakshmi, I-C.

வழியில் நேர்ந்த விபத்து.

அன்று திங்கட் கிழமை. எனக்குப் பரீக்ஷை ஆரம்பம். அவசரமாகச் சாப்பிட்டு விட்டு, பரீக்ஷைக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

கச்சேரித் தெருவில் நான் வந்து கொண்டிருந்த பொழுது ஓர் பயங்கரச் சம்பவம் நடந்தது. அப்பொழுது தான் நான் ஏதோ நினைவாக தெருவில் குறுக்கே வர ஆரம்பித்தேன். பரீக்ஷை ஞாபகம். நடுவீதியில் வந்து கொண்டிருந்த பொழுது "அக்கா, அக்கா" என்ற குரல் கேட்டு நின்று விட்டேன். "இதோ பேனா, மறந்து..................." என்ற போதுதான் திரும்பிப் பார்த்தேன். நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. என் தங்கை நடு ரோடில் கிடந்தாள். அருகே சைக்கிள் ஒன்று வேறு திசையாக விழுந்து கிடந்தது. அதன் சொந்தக்காரர்—மாணவர் போலும் சிதறிக் கிடந்த புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்தார். நான் ஒரே நொடியில் தாவிச் சென்று என் தங்கையைத் தூக்க முயன்றேன். விழுந்த அதிர்ச்சியால் பேசாமல் கிடந்த அவளை இருகைகளாலும் தூக்கி அணைத்தேன். அவள் "இதோ பேனா" என்று பேனாவை நீட்டினாள். நல்லவேளையாகக் காயம் ஒன்றும் படவில்லை. அவளை ஒரு ரிக்ஷாவில் ஏற்றி வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு பள்ளிக்கூடத்திற்கு வந்து சேர்ந்தேன். ஆனால் முதல் மணியடித்து ஐந்து நிமிஷம் ஆகியிருந்தது. ஆசிரியை கேள்வித்தாள்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார். பேனாவை பள்ளிக்கு வரும் அவசரத்தில் மறந்து விட்ட அந்தச் சிறு தவறு எத்தனை பேருக்குக் கஷ்டத்தை உண்டாக்கியது என்பதை என்னால் மறக்க முடியாது.

R. சாந்தா, I-C.

வரிசை ஒழுங்கு

அமைதியாகவும் நன்றாகவும் ஒரு காரியத்தைச் செய்வதற்கு ஒழுங்கு அவசியம். இல்லாவிட்டால் குழப்பமும் காலதாமதமும் தான் ஏற்படும்.

மாணவர்களாகிய நாம் பாடம் முடிந்து பள்ளியை விட்டு வெளியே செல்லும் பொழுது தாறுமாறாக ஓடி நெருக்கடியை உண்டு பண்ணுவதால் என்ன தீமை விளையும் என்பது நமக்குத் தெரியும். அதே போல வண்டிகளில் ஏறும் போதும், புகை வண்டி நிலையங்களில் பயணச் சீட்டு வாங்கு மிடங்களிலும், இன்னும் இவை போன்ற நெருக்கடி ஏற்படும் இடங்களில் ஜனங்கள் வரிசைஒழுங்கைக் கடைப் பிடிக்காமல் திரளாகக் கூடிக் கலகம் விளைவிக்கிறார்கள்.

முன் வந்தவர் முன்னும், பின்வந்தவர் பின்னும் க்யூவரிசையில் நின்று காரியத்தைச் சாதிப்பதே சிறந்த முறை. இதுதான் வரிசை ஒழுங்கு முறை. இம்முறையை எறும்புகள் கூட அனுசரிப்பதை நாம் பார்க்கிறோம். இம் முறையைக் கையாளுவதால் நமக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன. ஆத்திரமும் அவசரமும் இல்லாமல் தன் முறை வரும் வரை பொறுமையோடு காத்திருக்கும் நல்ல பழக்கம் நமக்கு ஏற்படுகிறது. ஆபத்துக்களையும் தடுக்கலாம். தேக சிரமம் இல்லாமல் நிதானமாகக் காரியத்தைச் செய்து முடிக்கலாம்,

நம் பள்ளியில் இவ்வொழுங்கு முறையை அனுசரிக்க நம் ஆசிரியர்கள் வற்புறுத்துகிறார்கள். நாம் அதன்படி நடந்து பொறுப்புள்ள மாணவியராய்த் திகழ்ந்தோமனால், பிறருக்கு இடையூறு செய்யாமல் என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற கொள்கையைக் கடைப் பிடித்து உண்மைத் தொண்டர்கள் என்ற புகழ் பெறுவோம்.

P. ராஜேஸ்வரி, I-D



V. Lalitha, II-B.

மாணவியர் சங்கம்

மாணவர்களே ஒரு பள்ளியின் செல்வமெனப் பாராட்டப்படுவோர். அத்தகைய செல்வமாகிய மாணவர் இல்லையேல் பள்ளியில்லை. தற்கால இளைஞர்களையும், இளம் பெண்களையும் வருங்கால சமூகத்திற்கேற்ப பயிற்சியளிக்கக் கூடிய பள்ளிகள் இல்லையேல் மாணவரும் இல்லை. ஒரு பள்ளியின் உயர்வும், சிறப்பும் அப்பள்ளி மாணவர்களையே பொறுத்துள்ளன. ஆகவே பள்ளியில் உள்ள எல்லாச்சங்கங்களிலும் இம் மாணவர் சங்கமே பள்ளியின் ஒளியாய், உயிராய், உயரிய செல்வமாய் விளங்குவதில் வியப்பில்லை.

எம் பள்ளியில் முதல் படிவம் முதல் ஆறும் படிவம் வரை உள்ள மாணவியர்கள் இதன் அங்கத்தினர்கள். கோடை விடுமுறைக்குப் பின் 1955-ம் ஆண்டு ஜூன் 21-ந் தேதி எம் சங்கத்தின் பல கிளைகளின் தலைவிகளைத் தேர்ந்தெடுத்து எம்பெருமானைத் துதித்த வண்ணம் இவ்வருடத்தின் அலுவல்களை உற்சாகத்துடன் செய்ய ஆரம்பித்தோம்.

மாணவியர் சங்க ஆரம்ப விழா ஸ்ரீ K. சந்திரசேகர அய்யர் B. A., B. L., அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. "கல்வியும் வாழ்க்கையும்" என்பதைப் பற்றி சொற்பொழிவு ஆற்றி அதன் வாயிலாக நமது படிப்பு அன்றாட வாழ்க்கையோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்னும் உயரிய கருத்தை எங்களுக்கு அறிவுறுத்தினர். அச்சொற்பொழிவு எங்களுக்கு ஊக்க மூட்டுவதாய் அமைந்தது.

எம் பள்ளியில் நாங்கள் பிறருக்குச் சேவைபுரிய பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. சேவைபுரிய விரும்பிய மாணவியர்கள் பள்ளி சேவா, சுகாதார சங்கங்களில் சேர்ந்து தம் அலுவல்களை உற்சாகத்துடன் செய்யத் தொடங்கினர். பள்ளிப் பொதுக் கூட்டங்களில், மாணவியர் அமைதியாக இருக்குமாறு கண்காணித்தல், வகுப்பறைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், பள்ளி விசேஷ நிகழ்ச்சிகளில் ஆசிரியர்களுக்கு உதவி செய்தல், போன்ற பல காரியங்களில் இதன் அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

எம்முள் மறைந்து கிடக்கும் பல திறமைகளை வெளியிடவும், வளர்க்கவும், பள்ளி பெரிதும் பாடுபடுகிறது. குறிப்பிட்ட தினங்களில் மாலை வேளையில் கலையபிவிருத்தி சங்கம், சங்கீதக் கூட்டம், தமிழ், ஸமஸ்கிருத ஸ்தோத்திர பாடல் வகுப்புக்கள் ஆகிய பிரத்தியேக வகுப்புக்கள் ஆசிரியைகளால் நடத்தப்படுகின்றன. அவைகளின் மூலம் முறையே தையல், சித்திரம், இனிய கீர்த்தனைகள், தோத்திரப் பாடல்கள், முதலியவைகளைக் கற்கின்றோம். தம் சிரமத்தையும் பாராது, எமக்கு இங்ஙனம் கலைகளைக் கற்பிப்பதில் ஊக்கங் கொண்ட அவ்வாசிரியைகளுக்கு எம் நன்றி என்றும் உரித்தாகுக. இவ்வாண்டு நுண்கலைக் கழகக் குழுவினர் "உத்தம பரதன்" என்னும் நாடகத்தை நடித்துக் காண்பித்து எண்ணற்ற ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றனர்.

சுவரை வைத்துக் கொண்டு தான் சித்திரம் வரைய வேண்டுமென்பது ஆன்றோர் வாக்கு. மாணவியர் உடல் பலம் பெற்று விளங்கினால் தான் அறிவு பலமும் பெறுவர். எம் பள்ளியில் உயர் தரப்பள்ளி மாணவியர்களுக்கு மாலை வேளைகளில் விளையாட்டுப் பயிற்சி யளிக்கப் படுகிறது. மாணவியர்கள் ஜோதி, கீதா, வீணா, பத்மம் என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் குறிப்பிட்ட தினத்தில் விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விளையாட்டு விழாவன்று இந் நான்கு குழுவினர்களும், அந்தந்த குழுவினர்க்குரிய வர்ணங்களில் ஆடைகள் அணிந்து அணிவகுத்து நிற்பர். அத்தினத்தன்று கும்மி, கோலாட்டம் போன்றவைகளும், மாதிரி விளையாட்டுக்கள் முதலியனவும் நடைபெறும்.

இவ்வாண்டும் வழக்கம் போல் எம் பள்ளியில் நடைபெற்ற சொல்வன்மை, கையெழுத்து, கட்டுரை, தையல், சித்திரம், பாட்டு, விளையாட்டு முதலிய போட்டிகளில் பலர் பங்கு கொண்டு பரிசும் பெற்றனர். அப்போட்டிகளில் பள்ளி ஆசிரியர்களே தீர்ப்பாளராக இருந்தனர். 'சாரதா லேடீஸ் யூனியன்' ஆதரவில் நடைபெற்ற தேவாரப் போட்டிக்கு எங்களிற் சிலர் சென்று வெற்றியும் பெற்றனர். இவ்வாண்டு நாங்கள் பல பள்ளிகளுடன் Tenniquoit போட்டிகளில் பங்கு கொண்டு இரண்டில் வெற்றி பெற்றோம். Bentinck school ல் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் கலந்து கொண்டோம். கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி, நவராத்திரி, சுதந்திர தினம், குடியரசு தினம் முதலிய விசேஷ தினங்கள் எம்பள்ளியில் கொண்டாடப்பட்டன.

'நல்லார் சொல் விரும்புவது நலனே' என்று மறை சாற்றிய பெரியோர் வாக்கை மெய்ப்பிக்கின்றனர் எம் பள்ளி நிர்வாகஸ்தர்கள். சத், பஜனா சங்கங்களின் ஆதரவில் நாங்கள் பல பெரியோர்களது பக்திரஸம் ததும்பும் உபந்நியாசங்களைக் கேட்டு இன்புற்றோம்.

இங்ஙனம் எம் பள்ளித் தலைவி அவர்களும், நிர்வாகஸ்தர்களும், ஆசிரியர்களும், நாங்கள் கல்வியிலும், கலைகளிலும், ஒழுக்கத்திலும் மேம்பட்டு விளங்கப் பாடுபடுகின்றனர். அவர்கட்கு எம் நன்றியும், வணக்கமும் உரித்தாகுக! இத்தகைய பேருபகாரத்திற்கு நாங்கள் செய்யக்கூடிய கைம்மாறு, அறிவு ஆற்றல்களில் சிறந்து விளங்கி, அன்பு உருக் கொண்டு, உலகுக்கு அரும்பணி ஆற்றி, ஆண்டவனின் அருளை அடையப் பாடு படுவதேயாம்.

C. R. சந்திரா VI. A.
R. ரமா V. A.

M. S. Rajalakshmi, II-A.

நடக்கும் கால் தவறுவதிலும் நாத்தவறுதல் கெட்டது

ஆசிரியர் சங்கம்

'அன்பு, அறிவு, சேவை, சரணம்' என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட இப்பள்ளி ஆசிரியைகள் அனைவரும் அவைகளை நிலை நாட்டவே பாடுபடுகின்றனர். வருங்காலப் பிரஜைகளாகிய இன்றைய மாணவியரது உடல், அறிவு வளர்ச்சியிலே ஈடுபட்டுள்ள நாங்கள் எங்கள் சங்கத்தின் ஆதரவில் பலதரப்பட்ட செயல்களை ஆற்றுகின்றோம். தன்னலமில்லாத் தொண்டினாலேயே மகிழ்ச்சி அடைய முடியும் என்பதை நினைவிலிருத்தி, பள்ளி நிர்வாகஸ்தர்களும், தலைவியவர்களும் குழந்தைகளின் பொது நலனுக்காக வகுக்கும் பாதைகளிலே சென்று அறிவும் பயனும் பெறுகின்றோம்.

இவ்வாண்டு எம் சங்கத்து ஆரம்ப விழா ஜூன் மாதம் 25ந் தேதியன்று ஸ்ரீ V. கோதண்டராம ஐயர், B.A., L.T., அவர்கள் தலைமையில் இனிது நடந்தேறியது. வழக்கம்போல் மாதந்தோறும் இறுதிச் சனிக்கிழமையன்று கூடி மாதிரி வகுப்புக்கள் நடத்தியும், போதனுமுறைக்கு அவசியமானவையும், கல்வித் துறையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப தெரிந்து கொள்ளவேண்டியவையுமான விஷயங்களைப் பற்றியும் விவாதித்தோம். எம்முள் ஒருவராக எம் நலனையே பெரிதாகக் கருதும் எம் தலைவியும், தம் முதிர்ந்த அனுபவ வாயிலாக எங்களுக்குப் பல உண்மைகள் உணர்த்த மிக்க ஊக்கம் கொண்டவருமான எம் காரியதரிசி குருகுல தர்மாச்சார்ய ஸ்ரீ K. ரங்கஸ்வாமி அய்யங்கார், B.A., B.L., L.T., அவர்களும் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு எமக்கு வழி காட்டியாயிருந்தனர்.

சென்ற ஆண்டு ஆசிரியர் சங்க நாடகம் நடைபெருததால் இவ்வாண்டு அதற்கு அமோகமான வரவேற்பு இருந்தது. ஜனவரி மாதம் 26ந் தேதியன்று 'கிருஷ்ண துலாபாரம்' என்னும் நாடகத்தை ஸ்ரீ அமிருதா ராமசுப்ரமணியம், B.A. LL.B., அவர்கள் தலைமையில் விமரிசையாக நடித்து அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றோம். வழக்கத்திற்கு அதிகமாகவே தொகையும் வசூலாயிற்று.

எம் பள்ளியில் 27 சங்கங்கள் பாட திட்டத்திற்குப் புறம்பான அலுவல்களை ஒழுங்காக நடத்துவது ஒரு விசேஷ அம்சம். அவை யாவற்றிலும் ஒவ்வொருவரும் இரண்டு அலுவல்களுக்குக் குறையாமல் கலந்துகொண்டு எம்மாலான தொண்டாற்றினோம். அவற்றுள் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது விளையாட்டு விழா. உடற்பயிற்சி ஆசிரியை இதற்கு முழுப் பொறுப்பாளியானாலும் எல்லோருடைய ஒத்துழைப்பும் இதற்கு மிக அவசியம். ஒற்றுமையாக யாவரும் கூடி வேலை செய்தால் அரிய பெரிய காரியங்களையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும் என்பதற்கு இதுவே சான்று.

பள்ளி அதிகாரிகள் வகுக்கும் பாதையிலே வேலைகளைச் செய்து பொதுவாகப் பள்ளியின் நலனுக்கும் மேன்மைக்கும் பாடுபடுவதே ஆசிரியைகளின் கடமை.

வீடு இருளடைந்திருக்க, கோவிலில் விளக்கேற்றினாற் போல்

ஆனால் செய்யும் காரியங்களுக்கு ஒரு பாராட்டுதல் கிடைப்பின் அதுவே மேன்மேலும் பணியாற்ற உற்சாக மூட்டும். அதை நன்குணர்ந்திருக்கும் பள்ளி நிர்வாகஸ்தர்களும், தலைவியும் நாங்கள் கடமையெனச் செய்யும் பணிகளைப் பாராட்டி எங்களுக்கு விருந்துகள் அளிப்பது குறிப்பிடத்தக்கது.' வழக்கம்போல் பள்ளி நிர்வாகிகள் தீபாவளிக்கு முன்னதாக எங்கள் யாவருக்கும் இனியதோர் விருந்தளித்து, வஸ்திரங்களும் வழங்கினர். நாங்கள் எங்கள் மூத்த சகோதரியெனப் பெரிதும் மதிக்கும் எம் தலைவி தம் சொந்தச் செலவில் எங்களுக்கு அரியதோர் விருந்தளித்தார். ஆசிரியர்களின் மனப் போக்கையும், அவர்களது கஷ்ட நஷ்டங்களையும் நன்குணர்ந்து அவர்களின் முன்னேற்றத்திற்காகவே பாடுபடும் சிறப்பியல்புகள் அமைந்த எம்காரியதரிசி குருகுலதர்மாச்சார்ய ஸ்ரீ K. ரங்கஸ்வாமி அய்யங்கார், B.A., B.L., L.T., அவர்களும், கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ N. R. ஸ்ரீனிவாஸன், B.E., அவர்களும் எமக்கு அளித்த விருந்தை யாம் மறக்கவே முடியாது.

வள்ளல் சிவஸ்வாமி ஐயர் நற்சிந்தையோடு அமைத்திருக்கும் இப்பள்ளியில் பணியாற்றுவது எங்களுக்கு மிக்க பெருமையை யளிக்கிறது. அறிவிற் சிறந்த சான்றோர்கள் அடங்கியது எம் பள்ளி நிர்வாகக் கமிட்டி. தன்னலமில்லாத் தொண்டாற்றும் இயல்பு படைத்தவர் எங்கள் தலைவி. 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே மேற்கூறிய பெரியார்களின் ஆசியும், ஒத்துழைப்பும் எமக்கு இருக்கும்வரை நாங்கள் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக நடத்துவதில் வியப்பில்லை. இத்தகைய நல்லுறவும், மனச்சந்துஷ்டியும் எமக்கு என்றென்றும் நிலைக்குமாறு கலைவாணி அருள் புரிவாளாக.

C.R. சத்தியபாமா, M.A., B.T.,H. Sc., (Dip.)

R. சரஸ்வதிபாய், B.A., (Trd.)

அன்னையர் சங்கம்

சென்னைமா நகரில் மிகப் பிரசித்தி பெற்று விளங்குவது நம் பள்ளி. அப்பெருமைக்குக் காரணமாகப் பல சங்கங்கள் பணியாற்றிவரினும் அவற்றுள் மிக முக்கியமாகக் கருதவேண்டியது அன்னையர் சங்கமே. இது பதினோரு ஆண்டுகளாக மிக ஊக்கத்துடன் இடைவிடாது பள்ளியோடு ஒத்துழைத்திருக்கிறது. இது ஒன்றே நம் பள்ளி ஓர் லட்சியப்பள்ளியென்பதற்குச் சான்றாகும். தற்போது இதில் நூற்று பத்துப் பேர் ஜீவியகால அங்கத்தினர்களாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

நிகழ்ச்சிகள் :

சென்ற ஆண்டில் அன்னையர் பார்வையிடுவதற்கெனக் குறித்த

நாளில் அநேகர் வந்திருந்தனர். பள்ளிக் கண்காட்சியில் அன்னையர் பகுதிக்கு ஏராளமான சிறந்த கைவேலைப் பாடுகளைச் சேகரித்து அவற்றைக் காட்சிக்கு உகந்தபடி அடுக்கி அலங்கரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஸ்ரீமதி R. சீதா, ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி ஆகிய இருவரும் பாராட்டுக்குரியவர்கள். கண்காட்சித் திறப்புவிழாவன்று விற்பனைப் பகுதிக்குப் பல தின்பண்டங்களைச் சிலர் உதவி அதன் மூலம் கிடைத்த ரூ. 88-8-0 ஐ கண்காட்சிச் செலவுக்கு வழங்கினர். இவ் அன்னையர் அனைவருக்கும் எங்கள் நன்றி.

ஆண்டு விழா:

அன்னையர் சங்கத்தின் பதினோராவது ஆண்டுவிழா 1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-ம் தேதி மாலை எம் பள்ளி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினரான ஸ்ரீமதி K. சாவித்திரி அம்மாள் தலைமையில் வெகு சிறப்பாக நடந்தேறியது. அவர் தமது தலைமையுரையில் பின்வரும் விஷயங்களை எடுத்துரைத்தார்.

"சமீபத்தில் இப்பள்ளியின் பல விழாக்களில் நான் கலந்துகொண்டேன். குறிப்பிட்ட நேரம் தவறாது, மிகச்சிறப்பாக எல்லோரும் ஆச்சரியமடையும் வகையில் விழாக்கள் நடைபெற்றதை நேரில் பார்த்தேன். கல்விகேள்விகளிற் சிறந்த பெரியார்கள் நிர்வாகத்தில், ஒப்புயர்வற்ற தலைவி, அநுபவமிக்க காரியதரிசி, இவர்கள் பராமரிப்பில் இது ஒரு லட்சியப்பள்ளியாக விளங்குகிறது. இப்பள்ளிக்குத் தாய்மார் ஒத்துழைப்பு இருந்துவருவது பாராட்டத்தக்கது. அறிவு வளர்ச்சி, மனவளர்ச்சி, உடல் வளர்ச்சி ஆகிய இம் மூன்றிலும் சிரத்தை காட்டும் ஆசிரியர்களோடு அதே லட்சியத்துடன் தாய்மார்களும் ஒன்றுபட்டு, அவர்கள் அலுவல்கள் செவ்வனே நடைபெற உதவி செய்ய வேண்டும். தெய்வ நம்பிக்கை இளம் உள்ளங்களில் ஏற்படச்செய்வதோடு, நல்ல அறிவாளிகளான, ஆரோக்யமான, குடும்ப வாழ்க்கைக்கேற்ற பெண்மணிகளை உருவாக்க வேண்டும். பல பேர் ஒத்துழைப்பினால்தான் இது சாத்தியமாகும்."

அன்றைய நிகழ்ச்சிகளில் Dr. M. பாவனுபாய் M.B., B.S., ஸ்ரீமதி மைதிலி ஸ்ரீனிவாஸன், ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி, ஸ்ரீமதி M. S. லட்சுமி B.A., B.Ed., ஸ்ரீமதி K. K. சாரதா, B A., B.T., ஆகியோர், சொற்பொழிவாற்றினார்கள். இவர்கள் 'குழந்தைகளின் நோய்கள்', 'மாணவியரும் தெய்வழிபாடும்', 'பள்ளிக்கூடம் சமூக சேவா நிலயம்', 'குழந்தைகளிடையே வற்புறுத்த வேண்டிய சில முக்கிய பழக்கவழக்கங்கள்', 'தேகப்பயிற்சி ஆரோக்கியத்திற்கு அடிப்படை' ஆகிய தலைப்புக்களில் பயன்தரத்தக்க பல அரிய விஷயங்களைப்பற்றி முறையே பேசினர். அன்னையர் சார்பில் ஸ்ரீமதி ஜயலட்சுமி ஸ்ரீனிவாசன் அவர்களும் ஸ்ரீமதி P. N. செல்லம்மாள் அவர்களும் பள்ளியின் பல சிறந்த அம்சங்களைப்பற்றி எடுத்துக் கூறினர்.

ஸ்ரீமதி பூமா கிருஷ்ணஸ்வாமியும் ஸ்ரீமதி V. S. சீதாவும் இசையமுது பொழிந்து எல்லோரையும் களிப்படையச் செய்தனர். பள்ளி மாணவியர்

ராம நாடகக்கீர்த்தனை ஒன்றை நாட்டிய நாட்க நிகழ்ச்சியாகச் சித்தரித்துத் திறம்பட நடித்தனர். மங்கள கீதத்துடன் விழா இனிது முடிந்தது. இதை வெற்றிகரமாக நிறைவேற்றி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக்கொண்ட அன்னையர் அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி.

அன்னையர் பணி :

இச்சங்கத்தார் நவராத்திரியில் ஒரு நாள் குறிப்பிட்டு அன்று அங்கத்தினர் யாவரையும் வரவேற்று, தாம்பூலாதிகள் வழங்கும் பொறுப்பைத் தாமே ஏற்று நடத்துவதும், ஸ்ரீராம நவமியன்று விசேஷ பூஜையைத் தங்கள் பொருட் செலவிலேயே நடத்துவதும் வழக்கமாக உள்ளன. இவ்வருஷமும் அப்பணியை மகிழ்ச்சியுடன் செய்து நிறைவேற்றினர்.

முடிவுரை :

அன்னையரும் ஆசிரியரும் ஒத்துழைத்தே குழந்தைகளின் உள்ளப் பண்பாட்டிற்கான சூழ்நிலையை அமைக்கப் பாடுபடவேண்டும். அந்த ஒத்துழைப்பு எங்களுக்கு இடைவிடாது இருந்துவருவது இப்பள்ளியின் தனிச் சிறப்பாகும். அன்னையர் தொடர்பு மேலும் வலுப்பெற மூலகாரணமாக இருந்து நம்மைச் செயலாற்றச் செய்யும் நம் மதிப்புக்குரிய தலைவி ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T., அவர்கள் ஆதரவில் நம் சங்கம் தழைத்தோங்குவதாக!

V. சரோஜினி, வித்வான்
காரியதரிசி.

பழைய மாணவியர் சங்கம்

மாணவியர் தம் பள்ளி வாழ்க்கை முடிந்தவுடன் பற்பல துறைகளில் ஈடு படுகின்றனர். ஆனால் இளமை தொட்டு தாம் பயின்ற பள்ளி அனுபவங்கள் அவர்கள் மனதைவிட்டு வெகு சீக்கிரம் அகலுவதில்லை. கவலையற்ற, சந்தோஷ மான தமது பள்ளிவாழ்க்கையை நினைத்து இன்பமடைவார்கள். தாம் பயின்ற பள்ளியின்மேலுள்ள அன்பு மேலீட்டினால் அதன் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் ஈடுபட விரும்புவார்கள். அத்தகைய பழைய மாணவியர்களை வருடமொருமுறை ஒன்றுகூட்டி பள்ளி ஆசிரியர்களுடனும், மாணவியருடனும் தொடர்பு கொள்ளுமாறு வாய்ப்பளிப்பது பள்ளி பழைய மாணவியர் சங்கமே யாகும்.

எமது பள்ளியில் இச்சங்கத்தின் ஆண்டு விழா ஜனவரி 21-ந் தேதி மாலை 3-30 மணிக்கு ஆரம்பித்து மிகச் சிறப்பாக நடந்தேறியது. விழாவிற்கு ஸ்ரீ கே. இராஜேஸ்வரி Hindi Lecturer, Stella Maris College, அவர்கள் அக்கிராசனம் வகித்து, காரியங்களை நடத்திவைத்தார். பிரார்த்தனைக்குப் பிறகு பள்ளித் தலைவி, அவைத் தலைவியை சபையினருக்கு அறிமுகப் படுத்தினர். அவைத் தலைவியும் தம்

பள்ளி வாழ்க்கையையும் இப்பொழுது பள்ளி அடைந்துள்ள புகழையும் எடுத்துரைத்து, இப்பள்ளியும் பாரதமும் மேலோங்கி வளர இறைவனைப் பிரார்த்தித்தார். இதற்குப் பதில் கூறும் பொழுது நிர்வாகக் கமிட்டித் தலைவரான ஸ்ரீ. எஸ். வரதாச்சாரியார் அவர்கள் தாய்மார் சங்கத்தாரும் பழைய மாணவியர் சங்கத்தாரும் ஒன்று கலந்து தற்காலத்தில் கல்வித் திட்டங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பற்றிய விஷயங்களை ஆலோசித்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். பள்ளி பழைய மாணவியர் பள்ளியின் முன்னேற்றத்திலும் நலனிலும் ஒத்துழைத்து வரவேண்டுமென்றும் குறிப்பிட்டு, இச்சங்கம் நீடூழி வாழவேண்டும் என்றும் ஆசி கூறினார். அடுத்தபடி ஸ்ரீ வி. சரோஜினி, வித்வான், பள்ளிக்குப் பழைய மாணவியர் எவ்விதங்களில் தொண்டு புரியலாம் என்பதைச் சொன்னார். ஸ்ரீ. P. A. அம்மணி B. A., M. Ed., பள்ளி அடைந்துள்ள மகோன்னத நிலையை எடுத்துச் சொல்லி பழைய மாணவியர் சார்பில் நன்றி செலுத்தினாள். சௌ. C. R. சந்திரா VI-A., மாணவியர் சங்கத்துச் சார்பில், தாங்களும் பழைய மாணவியர் காட்டியுள்ள வழிகளைப் பின்பற்றுவதாக வாக்களித்தாள்.

வழக்கம்போல பள்ளி மாணவியரும், பழைய மாணவியரும், ஓர் கதம்ப நிகழ்ச்சியை நடத்தினார்கள். மிகவும் மனோகரமாக இருந்தது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

பள்ளியில் பெற்ற பயிற்சியை பரிமளிக்கச் செய்பவர் பழைய மாணவியரே. அவர்கள் பள்ளிக்குச் செய்யும் தொண்டுகளில் ஓர் மாணவிக்கு நான்காம் படிவம் முதல் ஆறாம் படிவம் வரை சம்பளம் அளித்தல், மத்தியானத்தில் தீனபந்து சங்கத்தின் வாயிலாக 'இடைவேளை போஜனம் அளித்தல் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவற்றை இடையறாது செய்து வருகின்றனர் இச்சங்கத்தார். பள்ளி ஜீவனாடிகளில் ஒன்றாகிய இச்சங்கம் மேலோங்கி வளர இறைவனைப் பிரார்த்திப்போமாக!

T. கல்பகம், B. A., B. T.,
M. பிச்சை,
காரியதரிசிகள்.

ஸர். எஸ். வரதாச்சாரியார் சிலை திறப்பு விழா

சென்ற ஜூலை மாதம் 24-ம் தேதி மாலை ஸர். எஸ். வரதாச்சாரியார் அவர்கள் சிலையை ராஜாஜி திறந்து வைத்தார். பள்ளியின் மேல் மாடியிலுள்ள பெரிய மண்டபத்தையும் 'லேடி வரதாச்சாரி ஹால்' எனப் பெயரிட்டுத் திறந்து வைத்தார். பள்ளி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள், ஆசிரியர்கள், மயிலைப் பிரமுகர்கள், பள்ளி அன்பர்கள் ஆகியோர் முன்னிலையில் விழா வெகு சிறப்பாக நடந்தேறியது.

ராஜாஜி பூரண கும்பத்துடனும் மங்கள கீதங்களுடனும் வரவேற்கப்

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE

UNVEILING OF THE BUST OF SIR S. VARADACHARIAR, Kt., B.A., B.L.,

President of the School Governing Body: 24-7-1955.

The Bust in Bronze.

Guard of Honour to Rajaji: 24-7-'55.

MADRAS

Unveiling of the Bust.

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE

SCHOOL DAY CELEBRATIONS: 13-8-1955.

Girls Welcome the Governor.



Shri Sri Prakasa presides.

பட்டார். பள்ளிப் பிரார்த்தனை மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. பிரார்த்தனைக்குப்பின் ஸ்ரீ எம். பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் ராஜாஜியை வரவேற்றுப் பேசினார். காலஞ்சென்ற சிவஸ்வாமி அய்யரின் சிறப்பான குணங்கள் ஸ்ரீ வரதாச்சாரியாருக்கும் ஏற்பட்டிருப்பதாகவும், அவர் இந்தப் பள்ளிக்கு ரூ. 40,000 நன்கொடை அளித்திருப்பதோடு, மாம்பலத்திலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆரம்பப் பாடசாலைக்கும் ரூ. 30,000 பெறுமான நிலம் வழங்கிய கொடை வள்ளல் என்றும் குறிப்பிட்டார்.

பள்ளித் தலைவி ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T., அவர்கள் சபையோரை வரவேற்று ஸர். எஸ். வரதாச்சாரியாருக்குப் புகழ்மாலை சூட்டினார். பின் இராஜாஜி அவர்கள் பள்ளிக்கூடத்தின் சார்பாக சிற்பி ஸ்ரீ கே. ராஜகோபாலுக்கு மாலை அணிவித்து, உடை வழங்கித் தமது தலைமையுரையை நிகழ்த்தினார்.

'பள்ளித் தலைமையாசிரியையின் பேச்சுத் திறமை ஒன்றே தலைமைப் பதவிக்கு அவர் தகுதியுடையவர் என்பதை விளக்குகிறது. குற்றமற்ற தெளிவான பயனுள்ள பேச்சு. இவர் போன்ற தலைமையாசிரியை இப்பள்ளிக்குக் கிடைத்திருப்பது இந்த ஸ்தாபனத்தின் அதிர்ஷ்டம், குழந்தைகளின் அதிர்ஷ்டம்.

ஸ்ரீ வரதாச்சாரியாரைப் பற்றியும் அவர் மனைவியைப் பற்றியும் பாராட்டிப் பேசிய புகழுரைகள் நிரம்பவும் தகுதி வாய்ந்தவை. ஸ்ரீ வரதாச்சாரியார் போன்ற ஒரு சத்புருஷர் நம்மிடையே யிருப்பது ஆண்டவன் அனுக்ரகம். அசூயையில்லாத பெருங்குணம் படைத்தவர். இப்பொழுது நான் பெயரிட்டுத் திறந்து வைத்த ஹால் அவர் மனதைப் போல் களங்கமற்றது; விசாலமானது. அதன் பெயர் 'ருக்மிணி அம்மாள் மண்டபம்' என்று தமிழில் இருந்தால் மிக நன்றாயிருக்கும்.

சிலைகளில் எனக்கு நம்பிக்கை இல்லை நாம் நெருங்கித் தெரிந்த ஒருவரின் சிலையை அப்படியே செய்வதென்பது சாத்தியமல்ல. ஆண்டவன் ஒருவனால் தான் அவ்வாறு படைக்க முடியும்.

இந்த ஸ்தாபனம் நம்மவருடைய சுய முயற்சியால் உருவானது. சர்க்கார் மான்யமோ, பிறநாட்டு உதவியோ இதற்கில்லை. ஆகவே நாம் இதை நமதாகவே பாவித்து உரிமை கொண்டாட இடமிருக்கிறது. ஸ்ரீ சிவஸ்வாமி அய்யரும், ஸ்ரீ வரதாச்சாரியார் அவர்களும் தனிச் சிறப்புக்கொண்ட மஹாபுருஷர்கள்; இருவரும் சூரியனும் சந்திரனும் போல. குழந்தைகளும் ஆசிரியர்களும் சூர்ய ஒளியிலும் நிலவிலும் இருந்து இன்பம் அநுபவிக்கிறார்கள். குழந்தைகளில்லாத ஸ்ரீசிவஸ்வாமிஐயரும் நிறையக் குழந்தைகள் இருக்கும் ஸ்ரீ வரதாச்சாரியார் அவர்களும் சேர்ந்து தர்மம் செய்துள்ள, ஸ்தாபனம் இது. இந்த தர்ம விசேஷத்தை எல்லோரும் உணர வேண்டும்.'

பள்ளி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீ P. N. ராமஸ்வாமி ஐயர், M.A., I.C.S., அவர்கள் வந்தனோபசாரம் கூற மங்களத்துடன் விழா இனிது முடிந்தது.

V. சரோஜினி, வித்வான்.

வீரமும் உணவும் சேருட ஊட்டு

நுண் கலை விழா

சென்னை மாநகரில் உள்ள பிரபல பெண் பள்ளிகளில் லேடி சிவஸ்வாமி அய்யர் உயர்தரப் பள்ளியும் ஒன்றாகும். பல பிரமுகர்களாலும் சிறந்ததெனப் பாராட்டப்படும் பெருமையும் பெற்றதாகும்.

இப் பள்ளியில் ஆண்டு தோறும் இரண்டு நாடகங்கள் நடைபெறுவது வழக்கம். ஒன்று வருட ஆரம்பத்தில் நடக்கும் மாணவியர் நாடகமும், மற்றொன்று வருட இறுதியில் நடிக்கப்படும் ஆசிரியைகள் நாடகமுமாகும். ஆசிரியைகள் தம் மாணவியரின் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தப் பாடுபடுதலோடு, தம் திறனையும் பிறர் அறியச் செய்கின்றனர். மாணவியர் நடிப்பதற்கும், ஆசிரியைகள் நடிப்பதற்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உள்ளன. மாணவியருக்கு உள்ள பல அனுகூலங்கள் ஆசிரியைகளுக்குக் கிடையா. முக்கியமாக மாணவியர் நாடகத்திற்கு ஆயிரக்கணக்கான மாணவியரிலிருந்து நடிகர்களைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்களது இளமை வேஷப் பொருத்தத்திற்கு மிக்க பயன்படும். ஆசிரியர்களோவெனில் தம்முடைய நடிகர்களை தம்முள்ளிருந்தே தேர்ந்தெடுக்கவேண்டும். ஆயினும் இவ்விரு நாடகங்களைக் கண்ட அனைவரும் இரண்டிற்கும் அதிக வேறுபாடு தெரியாமல் இருந்ததையும், இருவரது நடிப்புத் திறனையும் பாராட்டினர்.

எந்த நாடகம் யார் நடித்தாலும் பாராட்டப்படுவதன் காரணம் நாடகத்தைத் தேர்ந்தெடுப்பதும் அதன் வசனம் உணர்ச்சியூட்டும் வகையில் அமைப்பதுமேயாகும். மாணவியருக்கும் பொது மக்களுக்கும் ஒரு நீதியைப் புகட்ட வேண்டும் என்னும் நோக்கம் கொண்ட நாங்கள் புராணக் கதைகளையே பெரும்பான்மையும் தேர்ந்தெடுக்கிறோம். அதற்கேற்ப எல்லோர் மனதையும் உருக்கும் வண்ணம் வசனம் அமைத்துக் கொடுத்தவர் காவியப் பிரசங்க ரத்னாகர T. S. கண்ணபிரான் பிள்ளை அவர்கள். நடிகர்களும், கதை வசனமும் மட்டும் இருந்தால் ஒரு நாடகம் வெற்றிகரமாக நடந்துவிட முடியுமா? காட்சி ஜோடனைகளும், உடை, ஒளி, ஒலி வசதிகளுமே யல்லவா நாடகத்தின் பொலிவை மிகைப்படுத்துவன. இவற்றிலும் எங்களுக்கு ஒரு சிரமமுமில்லை; ஏனெனில் வழக்கம்போல பள்ளி நண்பர் ஸ்ரீமான் C. ஸ்ரீனிவாசன் அவர்கள் தம்முடைய கோஷ்டியாருடன் எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்? திறமை வாய்ந்த ஆசிரியர்களும், மாணவியரும் எம் பள்ளியில் இருக்கும்போது பின்னணி சங்கீதத்திற்கு வெளியாரை ஏற்பாடு செய்ய வேண்டியதில்லையல்லவா? தபேலா தவிர பின்னணி சங்கீதம் இசைத்தவர்கள் யாவரும் எம் பள்ளி ஆசிரியர்களும் மாணவியருமே என்பது பற்றி மிக்க பெருமை அடைகிறோம்.

இத்தனை சிறப்புக்களுடன் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 27-ம் தேதி, மாணவியர், இராமாயணப் பகுதியி

விருந்து 'உத்தம சகோதரன் பரதன்' என்னும் நாடகத்தை போலீஸ் கமிஷனர் ஸ்ரீ S. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் தலைமையில் நடித்தனர். வேஷப் பொருத்தமும், நடிப்புத் திறனும் யாவரையும் பரவசப்படுத்தின. 'க்ருஷ்ண துலாபாரம்' என்னும் நாடகத்தை இவ்வாண்டு ஜனவரி மாதம் 26ம் தேதி பள்ளி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீமதி அமிருதா ராமசுப்ரமணியம், B.A., L.L.B., அவர்கள் தலைமையில் ஆசிரியைகள் நடத்தினர். பள்ளி அலுவல்களுக்கிடையே ஒரு நாடகத்தை பல தடவைகள் ஒத்திகை நடத்தி பொது மக்கள் பாராட்டும்படி நடிப்பது சாமானியமல்ல. 'மனமுண்டானால் வழியுண்டு', 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்ற பழமொழிகளை மெய்ப்பித்தனர் எம் ஆசிரியர்.

'கடமையைச் செய், பலன் தானுகக் கிடைக்கும்' என்னும் உண்மையை நன்கறிந்த நாங்கள் ஆற்றிய பணிக்குத் தக்க பலனும் கடவுள் அளித்தார். இரு நாடகங்கள் மூலம் எங்களுக்கு கிடைத்த தொகை திருப்தியை யளித்தது.

"அறவோன் ஈட்டிய வொண்
பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை
போல"

உழைப்பின் பயனால் திரட்டிய நிதியை எம் பள்ளி அதிகாரிகள் சீதாலக்ஷ்மி இலவச வைத்தியசாலை, தீன பந்து சங்கம் முதலியவற்றிற்குப் பகிர்ந்தளித்தனர். நாடகத்தில் பங்கு கொண்ட யாவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

நாடகக் குழுவின் காரியதரிசிகளாகிய நாங்கள் எங்கள் வேலைகளைத் திறம்படச் செய்யவும், பள்ளியின் புகழும் பெருமையும் மேன்மேலும் உயர்வதற்கும் காரணமாயிருப்பவர் எம் தலைவி ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T. அவர்கள். அவர்களது முயற்சிதான் இதன் வெற்றிக்குக் காரணம் என்பது யாவரும் அறிந்த விஷயம். மற்றும் பள்ளி இதர ஆசிரியைகளும் இந் நாடகத்தில் பல விதங்களில் உதவி புரிந்தனர். அவர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி. இக்கழகம் மேன்மேலும் ஓங்கி வளர இறைவன் அருள் புரிவாராக.

இங்ஙனம்

கமலா ராஜகோபாலன், B.A., L.T.,
V. ராஜம்மாள்,
காரியதரிசிகள்

A. Lakshmi, V-C.

பள்ளி விளையாட்டு விழா

எம் பள்ளியில் திரைப்படக் காட்சியில் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்று வேகமாகச் சுழல்வதுபோல் வருட ஆரம்பத்திலிருந்து வருட இறுதிவரை பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக இடையீடின்றி நிகழ்ந்து கொண்டேயிருக்கும். அத்தகைய நிகழ்ச்சிகளில் பிப்ரவரி மாதம் 17-ந் தேதியன்று நடைபெற்ற விளையாட்டு விழா மிகச் சிறந்ததாகும். அது எல்லா வகையிலும் சிறப்புற்றது. ஏனெனில் ஏறக்குறைய பள்ளி மாணவியர் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளக் கூடிய விழா இது ஒன்றேயாகும்.

இவ்விழா ஒரு நாள் கொண்டாட்டமேயாயினும் இது சம்பந்தமான விளையாட்டுப் போட்டிகளும் பிற நிகழ்ச்சிகளும் ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே ஆரம்பமாகி விட்டன. விளையாட்டு விழாவன்று பிற்பகல் 2 மணிக்கே மாணவியர் அனைவரும் தத்தம் பிரிவுகளுக்குரிய வர்ண ஆடைகளை அணிந்து பள்ளியில் தமக்கென நியமித்த இடங்களில் கூடினர். சுமார் 3 மணிக்கு எம் பள்ளி அருகிலிருக்கும் விளையாட்டு மைதானத்திற்கு ஆசிரியைகளுடன் யாவரும் சென்றனர். அன்று மைதானம் விசேஷ அலங்காரங்களுடனும், ஒலிபெருக்கி வசதிகளுடனும் காட்சியளித்தது. குறிப்பிட்ட நேரத்தில் அன்றைய தலைவரான ஸ்ரீ. N. D. சுந்தரவடிவேலு M. A., L. T., D. P. I. அவர்கள் விஜயம் செய்தார். பள்ளி நிர்வாகஸ்தர்களும், Inspectress அவர்களும் உள்பட இதர அன்பர்களும், பெற்றேர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். தலைவரை A. C. C. பிரிவைச் சேர்ந்த மாணவியர் அணிவகுத்து நின்று வரவேற்றனர். தலைவரும் பிறரும் மேடையில் அமர்ந்த பிறகு விளையாட்டுப் போட்டிகளுள் வெற்றி பெற்ற மாணவியர் கையில் பள்ளிக் கொடி தாங்கி வெற்றிகீதத்தைப் பாடிக் கொண்டு கம்பீரமாக அணிவகுத்துத் தலைவருக்கு மரியாதை செலுத்தினர். பின்பு ஒன்றன்பின் ஒன்ருக நடந்த மாதிரி விளையாட்டுக்கள், A. C. C. உடற் பயிற்சி, கஞ்சிரா நடனம், கதம்ப உடற் பயிற்சி, முதலிய கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கதும், இசையுடன் கூடியதுமான நிகழ்ச்சிகளை இமை கொட்டாமல் பார்த்து வியப்பிலாழ்ந்தனர். அத்தினத்தன்று கூடியிருந்த அன்னையரும் பழைய மாணவியரும் அவர்களுக்கென நடத்தப்பட்ட விளையாட்டுக்களில் உற்சாகமாகப் பங்கெடுத்துக்கொண்டு பரிசுகளும் பெற்றனர். பின்னர் பள்ளி மாணவியர் சங்கத் தலைவியர் பள்ளிக் கொடியைத் தாங்கி முன் செல்ல, A. C. C. பிரிவினர் தம் தூய வெண்மையான உடையில் பின் தொடர ஏனைய மாணவியர் அனைவரும் நான்கு நான்கு பேராக 'அச்சமில்லை, அச்சமில்லை' என்ற பாரதியார் பாட்டுக்கேற்ப வீர நடையுடன் தலைவருக்கு வந்தனம் செலுத்தி தத்தம் இடங்களில் அமர்ந்தனர்.

தன்னை வெல்பவன் உலகத்தை வெல்வான்

பள்ளிப் பிரார்த்தனைக்குப் பிறகு தலைவியவர்கள் அக்கிராசனரையும் பிறரையும் வரவேற்றார். பள்ளி உடற் பயிற்சி ஆசிரியை வருடாந்திர அறிக்கையைச் சமர்ப்பித்த பின், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியருக்கு ஸ்ரீமதி காந்தம்மாள் சுந்தர வடிவேலு, M. Sc., L. T., அவர்கள் பரிசுகள் வழங்கினார். பின்னர் அன்றைய அவைத் தலைவராகிய ஸ்ரீமான் N. D. சுந்தரவடிவேலு, M.A., L.T., அவர்கள் பின்வருமாறு பேசினார் :—

"நான் இன்று உங்கள் விளையாட்டு விழாவிற்குத் தலைமை வகிப்பதில் மிக்க பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். நான் வரும்போதே பாரதிப் பித்தனாகிய என்னைக் கருத்தைக் கவரும் பாரதி பாட்டுக்கள் வரவேற்றன. பாரதி சுதந்திரக் கவி மட்டுமல்ல, சுதந்திரத்திற்குப் பின்னும் மக்கள் எப்படி நடக்க வேண்டுமென்று அறிவுறுத்தியவர்.

சாதாரணமாக விளையாட்டு என்றால் சந்தோஷமும் கூச்சலும்தான் இருக்கும். ஆனால் சந்தோஷமும் அமைதியும் ஒன்றாக இருக்க முடியும் என்பதை நீங்கள் நிரூபித்ததைப்பற்றி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எல்லாப் பள்ளிகளும் இதைப் பின்பற்றும் என்று நினைக்கிறேன்.

ஒரு நல்ல பள்ளியில் எல்லா மாணவரும் ஏதாவதொரு ஆடல் பாடலில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். அதை இங்கு கண்டேன். ஊக்கம் உறுதி இவற்றுடன் நம்முடைய சக்தியின் எல்லையை நாமே கண்டுகொள்ள, போட்டியில் கலந்து கொள்ளுதல் அவசியம். வெற்றி தோல்வி நமக்குப் பெரிதல்ல. பலனுக்கு நாம் பொறுப்பாளி அல்ல. முயற்சி வேண்டும். ஜெயித்தவர்களைப் பற்றி பொறாமையடையாதிருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். 'நம் காரியத்தை நாம் செய்யலாம். 'வெற்றி வரும் போது வரட்டும்.' இந்த உண்மையை நான் என் இளமையிலேயே உணர்ந்தேன். 'சென்றதினி மீளாது மூடரே' என்னும் பாரதியார் பாட்டை நான் இளமையிலேயே படித்து அதன் உட்கருத்தை முற்றிலும் உணர்ந்ததனால் தான் நான் இப்பதவியை இப்போது வகிக்கிறேன். எப்பொழுதுமே எல்லாக் காரியங்களையும் பெண்கள் ஆண்களைவிடத் திறமையாகவும் ஒழுங்காகவும் செய்வார்கள். அவர்களுக்கு ஊர் அக்கப்போர் அதிகம் இருக்காது.

அறிவு அவசியம்போல் உடலுறுதியும் வேண்டும். நல்ல உடல் இல்லாவிடில் அறிவு முதல் மற்ற எல்லாம் கோணலாய் விடும். உங்களில் பெரும்பான்மையோர் தாய்மார்களாக ஆகிறவர்கள். ஆகவே தாய்க்கு உடல்நலம் அவசியம்.

இக்காலத்தில் எல்லோரும் படிக்க விரும்புகிறார்கள். குடியாட்சியில் படிப்பு அதிகம் வேண்டும். பட்டினியாயிருந்து படிக்க முடியாது. ஆகவே வசதியற்ற குழந்தைகளுக்கு உங்கள் பள்ளியில் மத்தியானச் சாப்பாடு அளிப்பதுபற்றி மிக்க மகிழ்ச்சி. இம்

மாதிரியான நற்காரியங்களைச் செய்வதைப்பற்றி சிறுவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனால் குணத்தையும் பணத்தையும் ஒன்றாகப் பயன்படுத்தும் பெரியோர்கள் செய்து காண்பிப்பார்கள்.

இன்று நான் இங்குவந்து உங்கள் நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்து உற்சாகமும் நம்பிக்கையும் கொள்ள வாய்ப்பளித்ததற்கு வந்தனம்!

தலைவர் உரைக்குப்பின் ஸ்ரீமதி கமலா ராஜகோபாலன் B. A., L. T., அவர்கள் வந்தனம் கூறிய பிறகு மங்கள கீதத்துடன் விழா இனிது முடிந்தது.

R. சரஸ்வதிபாய், B.A.

J. Kalavathi, VI-C.

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE

SCHOOL ANNUAL SPORTS: 17-2-1956.

Head Mistress conducting the Director of Public Instruction who presided on the occasion, to the Dais.



Juniors: Running the Sack rac



Seniors: Balance walking.

Physical Demonstrations: Mass Kummi.



Girls' Union : Drama : Paduka Pattabhishekam : 27-8-1955.



Teachers' Union : Drama : Sri Krishna Thulabharam : 26-1-1956.

लेडी शिवस्वामि ऐयर गरल्स हैस्कूल

मैलापूर, मदरास

तारे

आकाश बहुत विशाल है। वह नीले रंग का है। आकाश देवताओं का घर है। उस में सूर्य, चन्द्र और तारे हैं। दिन में गरमी पडती है। रात में अन्धेरा होता है।

तारे सुन्दर नीले आकाश पर हैं। वे रात में ही जगमग रहे हैं। वे आकाश की सभी जगहों पर फैले हुए हैं। वे हमारी भूमि से बहुत दूर पर हैं। इस कारण से ही बहुत छोटे दिखाई देते हैं। फिर भी वे बहुत चमकीले हैं।

तारों की रोशनी भी होती है। रात में उनकी रोशनी से बागों के फल, फूल, पेड-पौधे और लताएँ दमक रहे हैं। तारे की पर्छाई रात के समय तालाब, नदी और समुद्र में (पानी में) दिखाई पडती हैं। वे तब बहुत सुन्दर मालूम पडते हैं। वे बरसात के समय में अच्छी तरह नहीं दिखाई पडते, क्यों कि बादल उनको छिपाते हैं।

N. त्रिपुरसुन्दरी, IV - A.

एक दिन

एक दिन ... .. हाय! वह दिन था डरने का दिन। हाथ पैर ठंडे हो गये। सामने तीन पञ्च थे। इधर विद्यार्थिनियों का एक दल था। एक छोटे मेज को पकडकर खडी थी मैं। मुझे एक छोटा प्रसंग करना था।

क्या करूँ? मैंने तो कुछ भी नहीं तैयारी की थी। प्रसंग करने का विषय तभी दिया गया। सब सहविद्यार्थिनियाँ मुझे ही देख रही थीं।

मैं भाषण करने लगी कि दसहरे की पूजा के बारे में। भाषण कर चुकी। फिर भी पंच चुप रहे। 'प्रणाम' कह चुकी और कुछ देर खडी थी। फिर एक पंच ने घंटी बजायी। मैं दौडकर आयी और मेरे स्थान में बैठ गयी।

वह दिन हमारे स्कूल का आरटारिकल तमिल स्पर्धा का दिन था। मैं इसके पहले इन स्पर्धाओं में शामिल नहीं हुई। इसलिये मैं डर रही थी।

V. राजलक्ष्मी, IV - B.

तिरुवल्लुवर

तिरुवल्लुवर एक बडे तमिल कवि थे। इन्होंने तिरुक्कुरल नामक कविता लिखी है। इनकी माँ का नाम आदी और बाप का नाम भगवन था। वे मद्रास शहर में मैलापूर में पैदा हुए। उनके पैदा होते ही उनके माँ-बाप उनको अकेले छोडकर चले गये

उसी रास्ते से जानेवाले एक आदमी ने उस बच्चे को देखा और उसे ले जाकर उसका पालन पोषण करने लगा उसका नाम भी उसने ही रखा। वल्लुवर बडे होने के बाद तमिल पढने लगे। वे इस भाषा के पंडित बन गये। उन का जो ग्रंथ है तिरुक्कुरल, वह मशहूर बन गया।

'तिरुक्कुरल' को तमिल में वेद के समान मानते हैं। इनकी कवितायें बहुत आसान हैं। तमिल पढने वाले और तमिल लोगों को तिरुक्-कुरल पढना चाहिये।

A. M. मुम्ताज, V. B.

मेरा स्वप्पन

परीक्षा के दिन थे। बाबूजी ने कह रखा था कि मैं प्रथम श्रेणी में पास न करूँगी तो आगे न पढायेंगे। उसी दिन मैं ने एक ऐसा स्वप्पन देखा, जो आज तक नहीं भूलता।

प्रातःकाल अंग्रेजी परीक्षा होनेवाली थी। इसलिये मैं रात एक बजे तक तन्मयता के साथ अंग्रेजी पढकर सो गयी।

मैं ने देखा कि अंग्रेजी परीक्षा के दिन में मैं बहुत देर से उठा, इसलिये मैं अपना स्नान पान आदि को जल्दी से खतम करके परीक्षा हाल में पहूँची, तो वहाँ सब लडकियाँ तन्मयता यसे उत्तर लिख रही थीं। मैं किसी तरह अपने स्थान पर जा बैठी। पर उस दिन भगवान मेरे साथ थे, इसलिये सब सवाल आसान थे।

मेरा रिसल्ट आ गया। मैं प्रथम श्रेणी में पास होगयी थी। इसलिये मैं खुशी के मारे माँ माँ कह कर पुकारने लगी। इस समय मेरी माँ मुझे जगाती हुई बोली "पाँच बज गये हैं, स्कूल की तैयारी करो" मैं अपना स्वप्पन सच होने के लिये भगवान से प्रार्थना करती हुई उठी।

आर. पार्वती, V. D.

आवश्यकता ही आविष्कार की जननी है।

फूल

इस दुनियाँ में कोई वस्तु सुन्दर है तो वह फूल है। फूल रङ्ग विरङ्गों के, तरह तरह सुगन्धों के और कई किस्मों के होते हैं। वे इतने सुन्दर हैं कि बयान करना भी मुश्किल हैं।

ये इतने सुन्दर होने के कारण ही सब उन्हें चाहते हैं। हमारे देश में राजा लोग तरह तरह महल बनवाने के अलावा उनमें सुन्दर बगीचे भी लगवाते थे। इन बगीचों के बीच में सुन्दर तालाब भी होते थे। इन तालाबों में बडे बडे कमल खिले रहते थे। इन में हंस वगैरह जल पक्षी भी रहते थे।

फूलों में गुलाब सुन्दर है इस से उसे फूलों का राजा भी कहते हैं। और लिलीफूल को रानी कहते हैं। क्यों कि इस में कोमलता भी है और सुगन्ध भी है। फूलों में कुछ फूल सवेरे खिलते हैं और कुछ रातके समय खिलते हैं। इन फूलों में कमल का स्थान ही बडा है। क्योंकि उसे फूलों का राजाधिराज कहते हैं। वह लक्ष्मीदेवी का अंश भी है।

S. वैदेगी, IV. E.

मेरा गाँव

भारतवर्ष गाँवों का देश है। इस देश में नगरों की अपेक्षा गाँवों की संख्या ज्यादा हैं। भारत के अधिक लोग गांवों में ही रहते हैं। यह कृषिप्रधान देश है।

मेरे गाँव का नाम मांगुडी हैं। माँगुडी में दोभाग हैं वे नल्ल माँगुडी और अगर मांगुडी हैं। अगर मांगुडी में ही हमारा घर और हमारे खेत हैं। ये सब धान के खेत हैं। इन खेतों से ही हमको चावल और दाल वगैरह मिलते हैं।

हमारे गाँव में किसानों की संख्या अधिक होती हैं। उन्का प्रधान काम खेती बारी करना है। साल में छे महीने उनको खेतों में काम नहीं रहता। तब वे चटाई बनना, कपड़ा बुनना, और सूत कातना आदि काम करते हैं।

इन के द्वारा पैदा किये हुए अनाज, कपडा और चटाइयँ आदि शहर आते हैं। वे इतने मेहनती होने पर भी बहुत गरीब होते हैं। आजकल सरकार इनकी स्थिति सुधारने कीकोशिश कर रही है।

आनन्दवल्ली, V. A.

हमारा देश

हर एक देश का अपना कोई एक नाम होता है। हम जिस देश में रहते हैं, उसका नाम 'भारतवर्ष' है। हमारे देश को 'भारत-वर्ष' क्यों कहते हैं मालूम? इसकी भी एक कहानी है पर मैं यहाँ नाम आने का कारण ही बताती हूँ।

हमारे देश में एक प्रतापी राजा शासन करते थे उनका नाम दुष्यन्त था। महाराजा भरत उन्हीं राजा दुष्यन्त और शकुन्तला के बेटे थे। वे बहुत देशों को जीतते थे और अपने राज्य को भी फैलाते थे। उन्हीं के समय यह एक विशाल और एक शासक के शासन में था। इसलिये इस देश का नाम 'भारतवर्ष' पडा।

हमारे देश का और एक नाम हिन्दुस्तान है।

S. सुशीला, IV. C.

सिनेमा से लाभ

वर्तमान युग विज्ञान का युग है। हमारे देश में जो कल था वह आज नहीं है। जो आज है वह कल न रहेगा। दुनियाँ के कई आविष्कारों में सिनेमा भी एक है।

सिनेमा का आविष्कार एडिसन नामक एक अमेरिक वैज्ञानिक से हुआ था। मनो-रञ्जन के साधनों में सिनेमा भी एक है। इस से मानव का उपकार भी हुआ है और अप-कार भी। सिनेमा से हम भिन्न भिन्न देशों के प्राकृतिकदृश्य, वहाँ के निवासियों की रहन सहन, उनके घर-द्वार, उनके खान-पान आदि के बारे में जान सकते हैं। सिनेमा से हमको सामाजिक मूल्य भी मिल सकता है। इसके द्वारा सामाजिक, राजनैतिक और धार्मिक कार्यों का प्रदर्शन देख सकते हैं।

सिनेमा से अच्छाई भी है और बुराई भी है। पहली बुराई ही आदमी पर पडती है। बहुत लोग सिनेमा के लिये अधिक पैसे खर्च करते हैं। मधु पीने के जैसे सिनेमा को भी कुछ लोग बार बार देखते हैं। यह स्वास्थय के लिये भी अच्छा नहीं।

T. S. यमुना बाय, IV. D.

उषा काल

मनुष्य जब नित्य के कामों से थक कर विश्राम के लिये निद्रा देवी की गोद में सो जाता है, और प्रातःकाल जब उसकी आँखें खुलती हैं, तो उस समय पूर्वी आकाश में लालिमा छाई होती है, इस समय को उषा काल कहते हैं।

